பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

108

செந்தமிழறிஞர்கள்

ISBN : 978-81-686742-5-7





நாவலர்
ச சோமசுந்தர பாரதியார்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

https://www.annacentenarylibrary.org/pages/view/47.%20%20'%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%B2%E0%AE%B0%E0%AF%8D'%20%E0%AE%9A%E0%AF%8B%E0%AE%AE%E0%AE%9A%E0%AF%81%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B0%20%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D_1879

செந்தமிழ்சிற்பிகள்

'நாவலர்' சோமசுந்தர பாரதியார் (1879-1959)



'நாவலர்' சோமசுந்தர பாரதியார் (1879-1959)

ச. சோமசுந்தர பாரதியார் சிறந்த தமிழறிஞர் ஆவார், இவர் பல பாடல்களையும் நூல்களையும் எழுதியதோடு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னின்று செயலாற்றியவர். மதுரை மாவட்டத்தின் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தின் தலைவராகவும் செயற்பட்டவர்.

பிறப்பு

சத்தியானந்த சோமசுந்தரன் என்ற இயற்பெயரைக் கொண்ட சோமசுந்தர பாரதியார் சுப்பிரமணிய நாயகர் (எட்டப்ப பிள்ளை)
– முத்தம்மாள் இணையருக்கு மகனாக 1879 சூலை 27-
ஆம் நாள் எட்டயபுரத்தில் பிறந்தார். சோமசுந்தர பாரதியார் எட்டயபுரம் அரண்மனையில் அரசியாரின் அரவணைப்பில் வளர்ந்தார்.

பாரதி பட்டம்

அரண்மனையில் பணியாற்றிவந்த சின்னசாமி ஐயரின் புதல்வர் சுப்பிரமணிய பாரதிக்கு நண்பர் ஆனார். இருவரும் தமிழ் நூல்களைக் கற்பதிலும், பாடல்களை உருவாக்குவதிலும் பெரு விருப்புக் கொண்டிருந்தனர். நெல்லைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு புலவர் வருகை தந்திருந்தார். அரண்மனை அவையில் நடந்த புலவர் கூட்டத்தில் ஈற்றடி ஒன்றைக் கொடுத்துப் பாடல் ஒன்றை இயற்றித் தருமாறு வேண்டினார். கூட்டத்துக்குச் சென்றிருந்த சோமசுந்தரமும் சுப்பிரமணியனும் தாம் எழுதிய பாடல்களைக் கொடுத்தனர். அனைத்துப் பாடல்களிலும் இவர்கள் எழுதிய பாடல்களே சிறந்ததெனத் தெரிந்தெடுத்த அப்புலவர் இருவருக்கும் பாரதி என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

கல்வி

சோமசுந்தர பாரதியார் தனது தொடக்கக் கல்வியை எட்டயபுரத்திலும் இடைநிலைக் கல்வியை நெல்லையில் சி.எம்.எஸ். கல்லூரி பள்ளியில் கல்வி கற்றார். நெல்லையில் படிப்பை முடித்த சோமசுந்தர பாரதி சென்னை கிருத்துவக் கல்லூரியில் பயின்று கலை இளவர் (Bachelor of Arts) பட்டமும் சென்னை சட்டக் கல்லூரியில் படித்து 1905-ஆம் ஆண்டில் சட்ட இளவர் பட்டமும் (Bachelor of Law) பெற்றார். தூத்துக்குடியில் வழக்கறிஞராகத் தொழிலாற்றியபொழுது தானே பயின்று 1913-ஆம் ஆண்டில் கலை முதுவர் (Master of Arts) பட்டம் பெற்றார்.

குடும்பம்

சோமசுந்தர பாரதியார் 1894 (ஏறத்தாழ) ஆம் ஆண்டில் மீனாட்சி அம்மையாரை மணந்தார். இவர் வழியாகச் சோமசுந்தர பாரதியாருக்கு இராசராம் பாரதி (1898 மார்ச் 30), இலக்குமிரதன் பாரதி (1903 பிப்ரவரி 16 - என்னும் மகன்களும் இலக்குமி பாரதி (1905 அக்டோபர் 13) என்னும் மகளும் பிறந்தனர்.

திருவெட்டாற்றில் 1927 திசம்பர் 1-ஆம் நாள் வசுமதி அம்மையாரை சோமசுந்தர பாரதியார் தனது 48-ஆம் வயதில்

மணந்தார். இவ்வம்மையாரின் வழியாக மீனாட்சி (1929 பிப்ரவரி 28 - லலிதா (1930 சூலை 27 -) ஆகிய இரு மகள்களும் பிறந்தனர்.

தொழில்

சோமசுந்தர பாரதியார் சிறிது காலம் எழுத்தராகவும், தட்டச்சாளராகவும் பணியாற்றினார்.1905-ஆம் ஆண்டு முதல் 1920-ஆம் ஆண்டு வரை தூத்துக்குடியில் வழக்குரைஞராகத் தொழிலாற்றினார். 1920-ஆம் ஆண்டு முதல் 1933-ஆம் ஆண்டு வரை மதுரையில் வழக்கறிஞராகத் தொழிலாற்றினார். 1933-ஆம் ஆண்டு சூன் மாதம் முதல் 1938-ஏப்ரல் மாதம் வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

இந்திய விடுதலைப் போராட்டம்

சோமசுந்தர பாரதியார் 1905-ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் வழக்கறிஞராகத் தொழிலாற்றத் தொடங்கியபொழுது, அங்கே விடுதலைப் போராட்டம் கனன்று கொண்டிருந்தது. அப்போராட்டத்தால் சோமசுந்தர பாரதியாரும் ஈர்க்கப்பட்டார். இந்திய தேசிய காங்கிரசு இயக்கம் நடத்திய பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார். இதனால் 1905-ஆம் ஆண்டு முதல் 1919-ஆம் ஆண்டு வரை அவரது பெயர் அரசினரின் ஐயப்பாட்டு பட்டியலில் இடம்பெற்று இருந்தது. வ. உ. சிதம்பரம் பிள்ளையின் அழைப்பை ஏற்றுக்கொண்டு சோமசுந்தர பாரதியார் “இண்டியன் நேவிகேஷன்” என்னும் சுதேசி கப்பல் கம்பெனியின் செயலாளராக இருந்தார். மதுரையில் தமிழ் மாநிலக் காங்கிரஸ் மாநாட்டினைக் கூட்டி அதன் செயலாளராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றினார். 1926 ஆம் ஆண்டில் சித்தரஞ்சன் தாசை மதுரைக்கு அழைத்து, சொற்பொழிவாற்றச் செய்தார்.

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம்

1937-ஆம் ஆண்டில் இராசகோபாலாச்சாரியார் சென்னை மாகாண முதலமைச்சராகப் பதவியேற்றபோது உயர்நிலைப் பள்ளிகளில் முதல் மூன்று படிவங்களில் (6, 7, 8 ஆம் வகுப்புகளில்) இந்தி மொழி கட்டாய

பாடமாக்கப்பட்டது. தாய்மொழியைத் தவிர்த்து வேற்று மொழியைத் திணிக்கக் கூடாதென்ற கருத்தால் இந்தி எதிர்ப்பு இயக்கத்தை நாவலர் உருவாக்கினார். 1937 செப்டம்பர் 5-ஆம் நாள் சென்னையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டின் தலைவராகப் பொறுப்பேற்றார். அக்டோபர் 25-ஆம் நாள் கட்டாய இந்திக் கல்வியைக் கைவிடக் கோரி, அன்றைய முதலமைச்சர் ச. இராசகோபாலாச்சாரியருக்குத் திறந்த மடல் (An Open Letter to Honourable Minister C. Rajagopalachariar) ஒன்றை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதினார் 1948-ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாவது இந்திப் போராட்டத்தின்பொழுது சோமசுந்தர பாரதியார் அன்றைய கல்வி அமைச்சர் தி. சு. அவிநாசிலிங்கனாருக்கு மடல் எழுதினார்.

தமிழ்ப்பணி

இளமையிலேயே தமிழிலக்கியத்தில் ஈடுபாடுகொண்டிருந்த சோமசுந்தர பாரதியார், பின்னாளில் தமிழிலக்கிய, இலக்கண ஆராய்ச்சியிலும் படைப்பிலக்கியத்திலும் ஈடுபட்டார். தனது ஆராய்ச்சிகளைச் சொற்பொழிவின் வழியாகவும் ஆய்வுநூல்கள் எழுதுவதின் வழியாகவும் வெளியிட்டார். 1932–33-ஆம் ஆண்டுகளில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராக இருந்தார்.

சொற்பொழிவுகள்

சோமசுந்தர பாரதியார் 1916 ஆகத்து 16-ஆம் நாள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் தசரதன் குறையும் கைகேயி நிறையும் என்னும் தலைப்பில் ஆராய்ச்சிச் சொற்பொழிவாற்றினார். இச்சொற்பொழிவு இதே தலைப்பில் பின்னர் நூலாக வெளியிடப்பட்டது. மதுரைத் தமிழ்ச் சங்கமும் இளம் கிறித்துவ ஆடவர் சங்கமும் (YMCA) மதுரையில் 1926 சனவரி 26-ஆம் நாள் நடத்திய ஆய்வரங்கிலும் [1] 1929 மார்ச் 11-ஆம் நாள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டத்திலும் திருவள்ளுவர் என்னும் தலைப்பில் உரையாற்றினார். இவ்வுரைகளே பின்னர்த் திருவள்ளுவர் என்னும் நூலாக வெளியிடப்பட்டன. திராவிடர் கழகம் கம்பராமாயணத்தையும் பெரிய புராணத்தையும் எரிக்க வேண்டும் என இயக்கம் நடத்தியது. அதன் ஒருபகுதியாக நடைபெற்ற

பட்டிமன்றத்தில் சோமசுந்தர பாரதியார் கலந்துகொண்டு கம்பராமாயணத்தை எரிக்கக் கூடாது என அண்ணாதுரையுடன் வாதிட்டார். அச்சொற்பொழிவு தீபரவட்டும் என்னும் நூலில் இடம்பெற்று இருக்கிறது.

நூல்கள்

1998-ஆம் ஆண்டு இவரது நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டது.

ஆய்வு நூல்கள்

திருவள்ளுவர், தொல்காப்பியர் ஆகியோரைப் பற்றிப் புனையப்பட்ட பொய்க்கதைகளை தன்னுடைய ஆய்வுகளின் மூலம் தகர்த்த சோமசுந்தர பாரதியார் பின்வரும் நூல்களை எழுதினார்:

தசரதன் குறையும் கைகேயி நிறையும் (1926)

திருவள்ளுவர் (1929) -தமிழ், ஆங்கிலம்.

சேரர் தாயமுறை (1960) -தமிழ், ஆங்கிலம்

தமிழும் தமிழரும்

சேரர் பேரூர் (1917) (தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும்)

அழகு

பழந்தமிழ் நாடு (1955)

நற்றமிழ் (1957)

Tamil Classics and Tamilakam (1912)

படைப்பிலக்கியங்கள்

சோமசுந்தர பாரதியார் பல தனிச்செய்யுள்களை அவ்வப்பொழுது இயற்றி இருக்கிறார். எனினும் பின்வரும் இரண்டு படைப்புகள் மட்டுமே நூல்களாக உருப்பெற்றிருக்கின்றன.

மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி: ஒரு செய்யுட் கதை (1947)

மாரி வாயில் (1936)

உரைநூல்

சோமசுந்தர பாரதியார் தொல்காப்பியத்தின் பொருள் இலக்கணப்பகுதியில் உள்ள அகத்திணை, புறத்திணை, மெய்ப்பாட்டியல் ஆகிய மூன்று இயல்களுக்கும் முழுமையாக உரை எழுதியிருக்கிறார். அவ்வுரை நூல் தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை என்னும் தலைப்பில் 1942 அம் ஆண்டில் வெளியிடப்பட்டது. மீதமுள்ளவற்றுள் களவியல், கற்பியல், செய்யுளியல் ஆகியவற்றில் இன்றியமையாச் சில நூற்பாக்களுக்கு மட்டும் புத்துரை எழுதினார். அவை அவருடைய காலத்தில் நூலாக உருப்பெறவில்லை. பின்னர் 1997ஆம் ஆண்டில் நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரின் நூல் தொகுதி – 2 : தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை என்னும் தலைப்பில் சோமசுந்தரனார் தொல்காப்பிய பொருளதிகாரத்திற்கு எழுதிய உரைகள் அனைத்தையும் திரட்டி மதுரை ச. சாம்பசிவனாரை பதிப்பாசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்டது. சோமசுந்தரனாரின் மகள் மருத்துவர் லலிதா காமேசுவரன் அந்நூலை வெளியிட்டார்.

மாநாடுகள்

சொற்பொழிவுகள், நூல்கள் ஆகியவற்றின் வழியாகத் தமிழ்ப்பணி ஆற்றியதைப் போலவே தமிழ் மாநாடுகள் சிலவற்றில் சொற்பொழிவாளராகவும் அமைப்பாளராகவும் தலைவராகவும் பொறுப்பேற்று சோமசுந்தர பாரதியார் செயற்பட்டார். அம்மாநாடுகளுள் சில பின்வருமாறு. மதுரையில் 1942 ஆகத்து 1, 2, 3 ஆகிய மூன்று நாள்கள் நடைபெற்ற முத்தமிழ் மாநாட்டின் வரவேற்புக் குழுத் துணைத் தலைவராக வினையாற்றினார். சென்னையில் 1948 பிப்ரவரி 14-ஆம் நாள் நடைபெற்ற அகில தமிழர் மாநாட்டின் தலைவர். சிதம்பரம் அண்ணாமலை நகரில் 1954 சூலை 11-ஆம் நாள் நடைபெற்ற சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பொன்விழாவின் 5-ஆம் நாள் விழா 1956 சூன் 3-ஆம் நாள் நடைபெற்றது. அன்றைய இயலரங்கிற்கு இவர் தலைமை வகித்தார்.

தமிழகப் புலவர் குழுவின் அமைப்புக் கூட்டம் 1958 திசம்பர் 14-ஆம் நாள் பசுமலையில் நடைபெற்றது. அக்கூட்டத்தின் முடிவுப்படி சோமசுந்தர பாரதியார் தமிழகப் புலவர் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1959 நவம்பர் 8-ஆம் நாள் மதுரை எழுத்தாளர் மன்ற ஆண்டுவிழாவில் தொடக்கவுரை ஆற்றினார்.

சமூகச் சீர்திருத்தப்பணி

சோமசுந்தர பாரதியார் இளமையிலேயே சமூகச் சீர்திருத்தத்தில் ஈடுபாடு கொண்டவராக இருந்தார். பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கத்தோடு தொடர்புடையவராக இருந்தார். எனவே சடங்குகள் நீக்கிய திருமணம் உள்ளிட்ட விழாக்களை முன்னின்று நடத்தினார். தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தின் மதுரை மாவட்ட தலைவராகவும் செயற்பட்டார். அப்பணியின் உச்சமாக, 1933 மே 13-ஆம் நாள் மதுரைக்கு அருகில் உள்ள உசிலங்குளத்தில் தாழ்த்தப்பட்டோர்க்கு எனத் தொடக்கப்பள்ளி ஒன்று நிறுவினார். அதன் தொடக்கவிழாவில் வ. உ. சிதம்பரனார் சிறப்புரையாற்றினார்.

வெளிநாட்டுப் பயணம்

சோமசுந்தர பாரதியார் 1930, 1936, 1944 ஆகிய ஆண்டுகளில் ஈழ நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

பட்டங்களும் விருதுகளும்

நாவலர் பட்டம் - ஈழ நாட்டிற்கு 1944-ஆம் ஆண்டு திசம்பர் 30 – 31-ஆம் நாள்களில் சோமசுந்தர பாரதியார் சென்றிருந்த பொழுது அங்குள்ள ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் மன்றம் நாவலர் பட்டத்தை அவருக்கு அளித்தது.

கணக்காயர் விருது - 1954 சனவரி 17-ஆம் நாள் மதுரைத் திருவள்ளுவர் கழகம் சோமசுந்தர பாரதியாருக்குப் பொன்னாடை போர்த்தி கணக்காயர் என்னும் பட்டத்தை அளித்தது. மதிப்புறு முனைவர் (Honorary Doctor) பட்டம் - அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழாவில் சோமசுந்தர பாரதியாருக்கு மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கப்பட்டது. 1959 சூலை 27-ஆம் நாள்

மதுரையில் சோமசுந்தர பாரதியாரின் 80-ஆம் அகவை நிறைவுப் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. 1959 அக்டோபர் 4-ஆம் நாள் மதுரை நகரவையும் தமிழகப் புலவர் குழுவும் இணைந்து சோமசுந்தர பாரதியாருக்குப் பாராட்டுக் கூட்டம் நடத்தினர்.

மறைவு

1959 திசம்பர் 2-ஆம் நாள் சோமசுந்தர பாரதியார் மதுரை பசுமலையில் உள்ள தனது வீட்டில் மயக்கமுற்று விழுந்தார். திசம்பர் 4-ஆம் நாள் மதுரை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். திசம்பர் 7-ஆம் நாள் தந்நினைவு இழந்தார். திசம்பர் 14-ஆம் நாள் இரவு 8.40 மணிக்கு மரணமடைந்தார். திசம்பர் 15-ஆம் நாள் மாலை 6 மணிக்கு அவரது உடலுக்குப் பசுமலையில் எரியூட்டப்பட்டது.

சோமசுந்தர பாரதியாரைப் பற்றிய கட்டுரைகள் / நூல்கள்


ச. சாம்பசிவனார் எழுதிய நாவலர் சோமசுந்தர பாரதியாரின் தமிழ் இலக்கியப்பணி என்னும் நூலில் இவரது வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு ம் இலக்கியப்பணி பற்றிய திறனாய்வும் இடம்பெற்றிருக்கின்றன.

குன்றக்குடி பெரியபெருமாள் எழுதிய தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள் என்னும் நூலில் இவரைப் பற்றிய கட்டுரை இடம் பெற்றிருக்கிறது. (சென்னை, 1996)

தமிழ்ப்பிரியன் எழுதிய இரு நூற்றாண்டுகளும் 50 தமிழ் அறிஞர்களும் என்னும் நூலில் இவரைப் பற்றிய கட்டுரை இடம் பெற்றிருக்கிறது. (சென்னை, 2005)

(😊)(😊)(😊) ＠＠＠＠＠ (😊)(😊)(😊)

ச. சோமசுந்தர பாரதியார்



மிடுக்குத் தமிழர்

பிறப்பு	சத்தியானந்த சோமசுந்தரன் சூலை 27, 1879 எட்டயபுரம் தூத்துக்குடி மாவட்டம்
இறப்பு	திசம்பர் 14, 1959 (அகவை 80) மதுரை
இருப்பிடம்	பசுமலை
தேசியம்	இந்தியர்
கல்வி	கலை முதுவர், சட்ட இளவர்.
பணி	வழக்குரைஞர், தமிழ்ப் பேராசிரியர்.
பணியகம்	அண்ணாமலை பல்கலைக் கழகம், சிதம்பரம்.
அறியப்படுவது	தமிழாய்வு
பட்டம்	நாவலர், கணக்காயர்.
பெற்றோர்	எட்டப்ப பிள்ளை, முத்தம்மாள்.
வாழ்க்கைத் துணை	(1) மீனாட்சி (2) வசுமதி
பிள்ளைகள்	(1) டாக்டர் இராசாராம் பாரதி (2) இலக்குமிரதன் பாரதி (3) இலக்குமி பாரதி (4) மீனாட்சி (5) மருத்துவர் லலிதா காமேஸ்வரன்

இலக்கிய வாழ்க்கை

நாவலர் சோமசுந்தர பாரதியார் பத்து நூல்கள் எழுதியுள்ளார். பெரும்பாலும் இலக்கியக் கூட்டங்களிலும் காங்கிரஸ் மேடைகளிலும் பேசுவதிலேயே இவரது நேரம் கழிந்தது. இளமையிலேயே தமிழிலக்கியத்தில் ஈடுபாடுகொண்டிருந்தார். பின்னாளில் தமிழிலக்கிய, இலக்கண ஆராய்ச்சியிலும் படைப்பிலக்கியத்திலும் ஈடுபட்டார். தனது ஆராய்ச்சிகளைச் சொற்பொழிவின் வழியாகவும் ஆய்வுநூல்கள் எழுதுவதின் வழியாகவும் வெளியிட்டார். 1932 -1933-ம் ஆண்டுகளில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராக இருந்தார். தமிழிசைத் துறைக்கும் தலைவராக இருந்தார். இக்காலத்தில் பண்டிதமணி கதிரேசன் செட்டியார். ஏ.சி. செட்டியார், வேங்கடசாமி நாட்டார் போன்றோர் இவரின் சக ஆசிரியர்களாய் இருந்தனர். நாவலரின் மாணவர்கL க. வெள்ளைவாரணர், அ.ச.ஞானசம்பந்தம், அ.மு. பரமசிவானந்தம் போன்றோர்.

ஆய்வு நூல்கள்

சோமசுந்தர பாரதியார் சங்ககால 'வஞ்சி நகரம்' நூலும், 'சேரர் தாய் முறை' ஆகிய ஆய்வு நூல்களை எழுதினார். வஞ்சி நகரம் நூல் 'Some Studies about the Chera of Yore' என்னும் தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்டது. சேரர் தாய்முறை என்ற நூல் பண்டைத் தமிழகத்தில் தாய்வழி சமூக மரபு இருந்தது என்று நிறுவுகிறது. இந்த நூல் பதிற்றுப்பத்தின் வழி பண்டைய உறவுமுறைகளையும், வம்சாவழியையும் ஆராய்ந்தது. இது 'System of Succession in Chera kingdom' என்ற தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்டது.

கவிதைகள்

நாவலர் எழுதிய 'மாரிவாயில்', 'மங்கலக் குறிச்சியில் பொங்கல் விழா' ஆகிய இரண்டும் கவிதை நூல்கள். அர்ஜுனன் பாண்டியன் மகளுக்குத் தூது விடுப்பது போன்ற அமைப்புடைய 122 பாடல்களைக் கொண்ட சிற்றிலக்கியம் 'மாரிவாயில்'. 'மங்கலக்குறிச்சியில் பொங்கல் விழா' நூல் பொதியமலையில் நிகழ்வதாகப் புனையப்பட்ட காதல் கதை.

உரைகள்

சோமசுந்தர பாரதியார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை வகுப்பு மாணவர்களுக்குத் தொல்காப்பியம் பொருளதிகாரத்தைப் பாடம் நடத்தியபோது மாணவர்கள் எழுதிய குறிப்புகளின் அடிப்படையில் எழுதப்பட்ட நூல் 'தொல்காப்பியம், பொருட்படலம் - புதிய உரை'. இது 1942-ல் வெளியானது. தொல்காப்பியத்தின் பொருள் இலக்கணப்பகுதியில் உள்ள அகத்திணை, புறத்திணை, மெய்ப்பாட்டியல் ஆகிய மூன்று இயல்களுக்கும் முழுமையாக உரை எழுதினார். மீதமுள்ளவற்றுள் களவியல், கற்பியல், செய்யுளியல் ஆகியவற்றில் இன்றியமையாச் சில நூற்பாக்களுக்கு மட்டும் உரை எழுதினார்.

1997-ல் 'நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரின் நூல் தொகுதி - 2, தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை' என்னும் தலைப்பில் பொ.வெ. சோமசுந்தரனார் தொல்காப்பிய பொருளதிகாரத்திற்கு எழுதிய உரைகள் அனைத்தையும் திரட்டி மதுரை ச. சாம்பசிவனாரை பதிப்பாசிரியராகக் கொண்டு நாவலரின் மகள் மருத்துவர் லலிதா காமேசுவரன் அந்நூலை வெளியிட்டார்.

சிலப்பதிகாரத்தைப் பாடம் நடத்தியபோது மாணவர்கள் எழுதிய குறிப்புகளைக் 'கானல்வரி' என்னும் தலைப்பில் தெ.பொ.மீனாட்சிசுந்தரம் நூலாக வெளியிட்டார். நச்சினார்க்கினியர், பரிமேலழகர் இருவருமே வடமொழி நூல்களை மேற்கோள் காட்டுபவர்கள். இவர்கள் தங்கள் காலக்கட்டத்தைப் பிரதிபலிப்பவர்கள் அல்லர் என்று கருதினார்.

கட்டுரைகள்

சோமசுந்தர பாரதியார் பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் எழுதிய கட்டுரைகள் 'நற்றமிழ்', 'பழந்தமிழ் நாடு' என்னும் தலைப்புகளில் நூல்களாக வந்துள்ளன. தொகுக்கப்படாத கட்டுரைகளும் உள்ளன. இவரது ஆங்கில நூல் 'Tamil Classics and Tamilakam'. சங்கப்பாடல்களில் குறிக்கப்படும் கரிகாலனும் திருமாவளவனும் வேறானவர்கள். மதுரை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை சீத்தலைச் சாத்தனாரினின்று வேறானவர், மெய்கண்டாரின் சிவஞானபோதம் மொழி பெயர்ப்பல்ல என்பன போன்ற கருத்துகள் இவரது கட்டுரைகளில் காரசாரமாய் விவாதிக்கப்படுகின்றன.

சொற்பொழிவாளர்

சோமசுந்தர பாரதியார் ஆகஸ்ட் 16, 1916 அன்று கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் 'தசரதன் குறையும் கைகேயி நிறையும்' என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு இதே தலைப்பில் பின்னர் நூலாக வெளியிடப்பட்டது.

மதுரைத் தமிழ்ச் சங்கமும் இளம் கிறித்துவ ஆடவர் சங்கமும் (YMCA) மதுரையில் ஜனவரி 26, 1926 அன்று நடத்திய ஆய்வரங்கிலும், மார்ச் 11, 1929-ல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டத்திலும் சோமசுந்தர பாரதியார் திருவள்ளுவர் பற்றி ஆற்றிய உரைகள் பின்னர் 'திருவள்ளுவர்' என்னும் நூலாக மதுரைத் தமிழ்ச் சங்கம் வழியாக உ.வே.சா உதவியுடன் வெளிவந்தது.

திராவிடக் கழகம் கம்பராமாயணத்தையும் பெரிய புராணத்தையும் எரிக்க வேண்டும் என இயக்கம் நடத்தியது. அதன் ஒருபகுதியாக நடைபெற்ற பட்டிமன்றத்தில் சோமசுந்தர பாரதியார் கலந்துகொண்டு கம்பராமாயணத்தை எரிக்கக் கூடாது என அண்ணாதுரையுடன் வாதிட்டார். அச்சொற்பொழிவு 'தீபரவட்டும்' என்னும் நூலில் இடம்பெற்றிருக்கிறது.

கரந்தைத் தமிழ்ச்சங்கக் கூட்டம் ஒன்றில் (1916) 'தசரதன் நிறையும் கைகேயியின் குறையும்' என்னும் தலைப்பில் இவர் பேசினார். இலக்கியக் கதாபாத்திரங்களை முழுமையான விமர்சனத்துக்கு உட்படுத்தும்போது பொதுவான சட்டங்களையும் காலப்பின்னணியையும் துணையாகக்கொள்ள வேண்டும் என்னும் முன்னுரையுடன் தசரதனை விமர்சிக்க ஆரம்பித்த இவரின் வாதம் அப்போதே சிறு பிரசுரமாக வந்தது. 1916 - 1919-ம் ஆண்டுகளில் இதே தலைப்பில் மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி எனப் பல இடங்களில் பேசிய பேச்சு விரிவாக அப்போது நூலாக வந்தது. சோமசுந்தர பாரதியார் முன்வைத்த கருத்துகள் இவருக்கு எதிரான ஒரு கூட்டத்தையும் உருவாக்க காரணமாயிருந்திருக்கின்றன.

விடுதலைப் போராட்டம்/அரசியல்

சோமசுந்தர பாரதியார் 1905-ல் தூத்துக்குடியில் வழக்கறிஞராகத் தொழிலாற்றத் தொடங்கியபொழுது, இந்திய தேசிய காங்கிரஸ்

இயக்கம் நடத்திய பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார். இதனால் 1905-ம் ஆண்டு முதல் 1919-ம் ஆண்டு வரை அவரது பெயர் அரசினரின் சந்தேகப் பட்டியலில் இடம்பெற்று இருந்தது. இந்த காலத்தில்தான் இவருக்கு அன்னிபெசன்டின் நட்பு ஏற்பட்டது.

வ. உ. சிதம்பரம் பிள்ளையின் அழைப்பை ஏற்று சோமசுந்தர பாரதியார் 'இண்டியன் நேவிகேஷன்' என்னும் சுதேசி கப்பல் கம்பெனியின் செயலாளராக இருந்தார். மதுரையில் தமிழ் மாநிலக் காங்கிரஸ் மாநாட்டினைக் கூட்டி அதன் செயலாளராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றினார். 1926-ம் ஆண்டில் சித்தரஞ்சன் தாசை மதுரைக்கு அழைத்து, சொற்பொழிவாற்றச் செய்தார்.

1937-ல் சி. ராஜகோபாலாச்சாரி சென்னை மாகாண முதலமைச்சராகப் பதவியேற்றபோது உயர்நிலைப் பள்ளிகளில் முதல் மூன்று படிவங்களில் (6, 7, 8-ம் வகுப்புகளில்) இந்தி மொழி கட்டாயப் பாடமாக்கப்பட்டது. தாய்மொழியைத் தவிர்த்து வேற்று மொழியைத் திணிக்கக் கூடாதென்ற கருத்தால் இந்தி எதிர்ப்பு இயக்கத்தை நாவலர் உருவாக்கினார். செப்டம்பர் 5, 1937-ல் சென்னையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டின் தலைவராகப் பொறுப்பேற்றார். அக்டோபர் 25, 1937-ல் கட்டாய இந்திக் கல்வியைக் கைவிடக் கோரி, அன்றைய முதலமைச்சர் இராஜகோபாலாச்சாரியருக்குத் திறந்த மடல் ('An Open Letter to Honourable Minister C. Rajagopalachariar)'ஒன்றை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதினார். 1948-ம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாவது இந்திப் போராட்டத்தின்பொழுது சோமசுந்தர பாரதியார் அன்றைய கல்வி அமைச்சர் தி. சு. அவிநாசிலிங்கனாருக்கு மடல் எழுதினார். மதுரை கோவில் நுழைவுப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஆகியவற்றிலும் பங்கேற்றார் .

நூல்கள் பட்டியல்

1998-ம் ஆண்டு சோமசுந்தர பாரதியின் நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டன.

ஆய்வு நூல்கள்

- தசரதன் குறையும் கைகேயி நிறையும் (1926)
- திருவள்ளுவர் (1929) - தமிழ், ஆங்கிலம்
- சேரர் தாயமுறை (1960) - தமிழ், ஆங்கிலம்
- தமிழும் தமிழரும்
- சேரர் பேரூர் (1917) - தமிழ், ஆங்கிலம்
- அழகு
- பழந்தமிழ் நாடு (1955)
- நற்றமிழ் (1957)
- Tamil Classics and Tamilakam (1912)

படைப்பிலக்கியங்கள்

- மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி: ஒரு செய்யுட் கதை (1947)
- மாரி வாயில் (1936)

உரைநூல்

- இந்தி கட்டாய பாடமா?

வாழ்க்கை வரலாறு

- நான் கண்ட சுப்பிரமணிய பாரதி

சோமசுந்தர பாரதியாரைப் பற்றிய நூல்கள்

- ச. சாம்பசிவனார் எழுதிய நாவலர் சோமசுந்தர பாரதியாரின் 'தமிழ் இலக்கியப்பணி' என்னும் நூலில் இவரது வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பும் இலக்கியப்பணி பற்றிய திறனாய்வும் இடம்பெற்றிருக்கின்றன.
- குன்றக்குடி பெரியபெருமாள் எழுதிய தமிழ் வளர்த்த 'நல்லறிஞர்கள்' என்னும் நூலில் இவரைப் பற்றிய கட்டுரை இடம் பெற்றிருக்கிறது. (சென்னை, 1996)
- தமிழ்ப்பிரியன் எழுதிய 'இரு நூற்றாண்டுகளும் 50 தமிழ் அறிஞர்களும்' என்னும் நூலில் இவரைப் பற்றிய கட்டுரை இடம் பெற்றிருக்கிறது. (சென்னை, 2005)

பட்டங்களும் விருதுகளும்

- **நாவலர்** பட்டம் - ஈழ நாட்டிற்கு 1944-ஆம் ஆண்டு திசம்பர் 30 – 31-ஆம் நாள்களில் சோமசுந்தர பாரதியார் சென்றிருந்த பொழுது அங்குள்ள **ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் மன்றம்** நாவலர் பட்டத்தை அவருக்கு அளித்தது.
- **கணக்காயர்** விருது - 1954 சனவரி 17-ஆம் நாள் மதுரைத் திருவள்ளுவர் கழகம் சோமசுந்தர பாரதியாருக்குப் பொன்னாடை போர்த்தி கணக்காயர் என்னும் பட்டத்தை அளித்தது.
- **மதிப்புறு முனைவர்** (Honorary Doctor) பட்டம் - அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழாவில் சோமசுந்தர பாரதியாருக்கு மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கப்பட்டது.
- 1959 சூலை 27-ஆம் நாள் மதுரையில் சோமசுந்தர பாரதியாரின் 80-ஆம் அகவை நிறைவுப் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.
- 1959 அக்டோபர் 4-ஆம் நாள் மதுரை நகரவையும் தமிழகப் புலவர் குழுவும் இணைந்து சோமசுந்தர பாரதியாருக்குப் பாராட்டுக் கூட்டம் நடத்தினர்.

நாவலர் சோமசுந்தர பாரதியார்!

பி.தயாளன்

https://keetru.com/index.php/2018-01-12-05-57-50/2014-03-08-04-39-26/2014-03-14-11-17-85/27277-2014-10-28-07-10-43

இந்தியாவின் விடுதலைப் போரில் பங்கேற்றவர்; அன்னைத் தமிழுக்கு அருந்தொண்டாற்றியவர்; தமிழர்களின் தாழ்நிலை அகற்றி, வாழ்வு உயரப்பாடுபட்டவர்; தமிழிலும் ஆங்கிலத்திலும் அரிய ஆராய்ச்சி நூல்களும் கட்டுரைகளும் எழுதித் தமிழின் பெருமையைத் தரணியறியச் செய்தவர்; பேச்சிலும் எழுத்திலும் 'தமிழ் மரபு' இது, - 'அயல் மரபு' இது என விளக்கியவர்; அஞ்சாது எடுத்து முழக்கியவர்; தென்னகத்தில், தாய்த்தமிழ் காக்க நிகழ்ந்த மொழிப் போரில், முன்னின்று போராடியவர். 'கப்பலோட்டிய தமிழர்' வ.உ.சிதம்பரனாரோடு சேர்ந்து தேச விடுதலைத் தீக்கொழுந்தைத் தென்னாடெங்கும் எரியவிட்டவர்; அவர் தோற்றுவித்த கப்பல் கழகத்தின் செயலராக இருந்து கருத்தோடு செயல்பட்டவர்;

ஒத்துழையாமை இயக்கத்திலும், தீண்டாமை ஒழிப்பிலும் அண்ணல் காந்தியடிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றியவர்; தம் குடும்பத்திலிருந்து ஏழு பேரைச் சிறைக்கு அனுப்பி, இந்திய விடுதலை வரலாற்றில் தமக்கெனத் தனி முத்திரையைப் பதித்துக் கொண்டவர்! இப்படியெல்லாம், பல்வேறு புகழ்மொழிகளுக்குப் பாத்திரமானவர்தான் 'பசுமலை நாவலர்' சோமசுந்தர பாரதியார்!

இவரது தந்தையார், எட்டையபுரம் எட்டப்பிள்ளை, தாயார் முத்தம்மாள். பிறந்த நாள் 28.07.1879; இவருக்குப் பெற்றவர்கள் இட்ட பெயர் சோமசுந்தரம்.

எட்டையபுரம் அரண்மனையில் முதன்மை ஆசிரியராக இருந்த சங்கர சாஸ்த்திரியாரிடம் தமிழ் மொழி, வடமொழி இரண்டிலும் எழுத்தறிவைப் பெற்றார். திண்ணைப் பள்ளிக் கூடத்தில் கற்கத் தொடங்கினார். பின்பு உயர் தொடக்கப் பள்ளியில் சேர்ந்து பயிலத் தொடங்கியபோது, 'பாட்டுக்கு ஒரு புலவன்' மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியாரும், நாவலர் சோமசுந்தர பாரதியாரும் நெருங்கிய தோழர்களாக விளங்கினார்! இவ்விருவரும் பிறவியில் 'இரட்டையர்களாக' இல்லாவிடிலும், எட்டையபுரத்தில் பிறந்த ஒரு மட்ட வயதினர்! அப்போதெல்லாம், திருநெல்வேலியில் நெல்லையப்பக் கவிராயரது வீட்டில் தமிழ்ப் புலவர்கள் கூடிக் கலந்துரையாடி மகிழ்வார்கள். அக்கூட்டத்தில், இனிய தமிழ் சோமசுந்தரமும், கவிபாடும் சுப்பிரமணியமும் கலந்து கொள்வர். பைந்தமிழ்ச் சுவையைப் பருகி மகிழ்வர்!

ஒருசமயம் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் புலவர்களுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. அவ்விழாவில் வெண்பாபோட்டி அறிவிக்கப்பட்டது. அப்போட்டியில் இவ்விருவரும் கலந்து கொண்டு வெண்பாக்களை இயற்றிப் பாடினர். "இந்த இளம் வயதிலேயே இத்துணை அழகாக வெண்பாப் பாடுகிறார்களே!" என்று வியந்து 'பாரதி' என்னும் பைந்தமிழ்ப் பட்டத்தை வழங்கிப் பாராட்டினர். அன்றிலிருந்து சுப்பிரமணியம் 'சுப்பிரமணிய பாரதி' ஆனார்! சோமசுந்தரம் 'சோமசுந்தர பாரதி' ஆனார்! திருநெல்வேலியில் உள்ள சர்ச் மிசன் உயர்நிலைப் பள்ளியில் படித்து, பின்பு கல்லூரியில் சேர்ந்து 'இடைக்கலை' (எஃப்-ஏ) படித்து முடித்தார்.

சென்னைக்குச் சென்று கிறித்துவக் கல்லூரியில் சேர்ந்து இளங்கலை (பி.ஏ) படித்து முதல் மாணவராக தேர்ச்சிப் பெற்றார். அவர் பயின்ற கிறித்துக் கல்லூரியில் அப்போது, ‘பரிதிமாற் கலைஞர்’, ‘கோபாலாச்சாரியார்’, ‘தமிழ்க் கடல் மறைமலையடிகளார்’ ஆகியோர் தமிழ்ப் பேராசிரியர்களாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்து, சட்டம் படித்துத் தேறினார். பின்னர், சென்னை அரசினர் வருவாய்த்துறை அலுவலகத்தில் எழுத்தராக நுழைந்தார். பாப்புனைவதில் வல்லவரான பாரதி, அங்கு ‘கோப்பு’களோடும் சில காலம் அல்லாடினார்!

அப்புறம் தனியாகத் தேர்வு எழுதி 1913 ஆம் ஆண்டு முதுகலைப் பட்டம் பெற்றார். முதுகலைப் படிப்பில் முதன் மொழியாகத் தமிழையும், துணை மொழியாக மலையாளத்தையும் எடுத்துப் பயின்று தேர்ச்சி பெற்றார்.

எட்டையபுரத்துக்கு அருகில் உள்ள கடம்பூர் என்ற கிராமத்தைச் சேர்ந்த மீனாட்சி என்பவரை 1894 ஆம் ஆண்டு தமிழ் முறைப்படி மணந்தார். முதல் மணைவி உடல்நலமின்றி இறந்தமையால், வசுமதி என்பவரைத் திருமணம் புரிந்து கொண்டார்.

தூத்துக்குடியில் வழக்கறிஞராக 1905 முதல் 1920 ஆம் ஆண்டுவரை பணிபுரிந்தார். பின்னர், மதுரை ‘பசுமலை’-யில் இருந்து கொண்டு வழக்கறிஞராகத் திறம்படச் செயல்பட்டார். அக்காலத்தில் மிகச் சிறந்த வழக்கறிஞர் என்று பாராட்டப்பட்டார்.

ஆங்கிலேய ஆட்சி ‘கப்பலோட்டிய தமிழர்’ வ.உ.சிதம்பரனார் மீது கொடுமையான வழக்குகளைத் தொடுத்தது. வ.உ.சி மீதான வழக்குகளை எதிர்த்து வாதாடிய மிகச்சிறந்த வழக்கறிஞர்களுள் நாவலர் பாரதியாரும் ஒருவர் என்பது வரலாற்றுப் பதிவு.

நாவலர் பாரதியார் 1933 ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைமைப் பொறுப்பை ஏற்றார். தமிழின் சிறப்பு, தமிழர் கலை, பண்பாடு ஆகியன குறித்து தாம் கண்ட புதுமைக் கருத்துக்களை ஆணி அடித்தாற்போல் மாணவர் மனம் கொளச் சொல்லிப் பதியவைப்பார்.

நாவலர் பாரதியாரிடம் யாரெல்லாம் நற்றமிழ் பயின்றார்கள் தெரியுமா? டாக்டர் அ.சிதம்பநாதச் செட்டியார், ச.ஆறுமுக முதலியார்,

க.வெள்ளைவாராணனார், அ.மு. பரமசிவானந்தம், அ.ச. ஞானசம்பந்தன் ஆகியோர் நாவலரிடம் தமிழ் பயின்று பிற்காலத்தில் நற்றமிழ் அறிஞர்களாக நாடும் ஏடும் புகழச் சிறப்புப் பெற்றனர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களுக்கு மத்தியில் நாவலர் பாரதியார், 'விண்மீன்களுக்கு நடுவே விளங்கும் வெண்ணிலா' எனத் திகழ்ந்தார்.

'செக்கிழுத்த செம்மல்' வ.உ.சி.யின் நட்பால் நாவலர் பாரதியாருக்கு நாட்டு விடுதலையில் நாட்டம் ஏற்பட்டது. நெல்லை மாநகரில் காங்கிரஸ் கட்சியின் மாநாட்டை தலைமையேற்று நடத்தினார். காந்தியடிகளைத் தென்தமிழ் நாட்டுக்கு முதன் முதலில் வரவழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்த பெருமை நாவலர் பாரதியாரைச் சாரும். அதேபோல், அண்ணாமலைப் பல்கலைக்கழத்தில் இவர் பணிபுரிந்த போதுதான், காந்தியடிகள் அங்கு வந்தார். தம் அருமைப் பெண் குழந்தைகளான மீனாட்சி, லலிதா ஆகிய இருவரும் அணிந்திருந்த தங்க நகைகளைக் கழற்றி நாட்டு விடுதலைக்கு நன்கொடையாக அண்ணல் காந்தியடிகளிடம் அளிக்கச் செய்தார்.

"பொதுக் கூட்டங்களில் தமிழர்கள் தாய் மொழியிலேயே பேசுதல் வேண்டும். அயல்மொழியில் பேசுதல் கூடாது. எவரேனும் அயல்மொழியில் பேசப் புகுந்தால், அவரைத் திருத்தும் பொறுப்பைப் பொது மக்கள் ஏற்றல் வேண்டும்" என்று சென்னை மாகாணச் சங்கத்தின் சார்பாக தஞ்சையில் 1918 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் மூலம் அக்காலத் தமிழரின் நிலையைத் தெரிந்து கொள்ளலாம். நாவலர் பாரதியார் பொதுக்கூட்ட மேடைகளில் தமிழ் ஒலிக்கச் செய்தார்.

'முத்தமிழ்க் காவலர்'- கி.ஆ.பெ. விசுவநாதத்தால் தொடங்கப்பட்ட 'தமிழர் கழக'கத்தின் தலைவரானார் நாவலர் பாரதியார்.

சென்னை மாநிலத்தில் முதலமைச்சராக 1937 ஆம் ஆண்டு இருந்த இராசகோபாலச்சாரியார், தமிழகப் பள்ளிகளில் இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாகக் கொண்டு வந்தார். இதைத் தமிழகம் முழுவதும் எதிர்த்தது. தமிழகத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாடுகள் அனைத்திலும் நாவலர் பாரதியார் பங்கு கொண்டு முழங்கினார்.

சென்னையில் 1937 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்கு நாவலர் பாரதியார் தலைமை தாங்கினார்.

அம்மாநாட்டில், "இந்தி மொழியைப் பள்ளிகளில் கட்டாயப்பாடமாக வைப்பது, தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தமிழர் நாகரிகத்திற்கும் கேடு செய்யும். சட்டசபைகளிலும், நீதிமன்றங்களிலும் அரசியல் அலுவல் கூடங்களிலும் தாய்மொழியாகிய தமிழ் மொழியிலேயே அனைத்து நடவடிக்கைகளும் நடைபெறுதல் வேண்டும்". என்று தீர்மானம் நிறைவேற்றச் செய்தார்.

"கல்லூரி வகுப்பறையில், பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறையில் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு, மேலே மின்விசிறி சுழன்றாட, விரிந்த ஏட்டில் தெரிந்த செய்தி இது என்று நீட்டி முழக்கி ஆராய்ச்சி செய்து கொண்டு இருந்திருக்க வேண்டிய அந்தப் பேராசிரியர், குகை விட்டுக் கிளம்பிய புலி எனப் போர்க்கோலம் பூண்டு, ஊரை நாடி, மக்களைக் கூட்டி, உரத்தக் குரலில், உறங்கிடுவோர்க்கும் உணர்ச்சி ஏற்படும் வகையில் தமிழின் தன்மையை அதன் சிறப்பை, அதனை அழிக்க வரும் பகையை, அந்தப் பகையை வெல்ல வேண்டிய இன்றியமையாமையை எடுத்துச் சொன்னார். மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையைத் தவறாது ஆற்றினார். தமிழ் கற்றதன் கடனைத் தீர்த்தார்!" என்று பேரறிஞர் அண்ணா, நாவலர் பாரதியாரைப் போற்றிப் புகழ்ந்துரைத்துள்ளார்.

'தசரதன் குறையும் கைகேயி நிறையும்', 'அழகு', 'சேரர் தாயமுறை', 'சேரர் பேரூர்', 'தமிழும் தமிழரும்', 'திருவள்ளுவர்', 'தொல்காப்பியர் பொருட்டலப் புத்துரை'. 'மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி', 'மாரி வாயில்' 'நாவலர் பாரதியாரின் ஆராய்ச்சிகள்'- போன்ற தமிழ் நூல்களையும், ஐந்து ஆங்கில நூல்களையும் எழுதி தமிழுலகுக்கு அளித்துள்ளார்.

நாவலர் பாரதியார் 'உரைநடை வித்தகர்' என்பதுடன் 'கவிதை புனையும் பாவாணராக'வும் விளங்கினார்.

தமிழ் இலக்கண-இலக்கியங்கள், அரசியல், வரலாறு, தமிழர் நாகரிகம், பண்பாடு, மொழி பெயர்ப்பு என்பன குறித்து நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை அக்காலத்தில் வெளிவந்த பல்வேறு இதழ்களில் எழுதியுள்ளார்.

தமிழகத்தில் 'ஆரிய-திராவிட' எதிர்ப்பு அரசியல் நடந்த நேரம் அது. கம்பராமாயணத்தைக் கொளுத்த வேண்டும் என்றும், 'கூடாது' என்றும்

சொற்போர் ஒன்று 14.03.1943 இல் சேலத்தில் நடைபெற்றது. ‘கொளுத்தக் கூடாது’ என வாதிட்டவர் நாவலர் பாரதியார். ‘தீயிட்டுக் கொளுத்த வேண்டும்’ என வாதிட்டவர் பேரறிஞர் அண்ணா.

“ஒரு சிறந்த காவியத்தை எரிப்பது நல்லதல்ல. அது தமிழ்நெறியன்று. ஆபாசக் கருத்துக்களை எரிக்கச் செய்யப்படும் முயற்சிக்கு வேண்டுமானால் நான் துணை நிற்பேன். அருந்தமிழ் நூலை எரிப்பதால் ஆபாசக் கருத்தை எப்படி அழிக்க முடியும்? கம்பனைப் போல ஓர் சிறந்த கவியை நான் கண்டதில்லை. மக்களுக்கு அறிவூட்டுங்கள்; ஆபாசத்தை எடுத்துக் கூறுங்கள்’ என்று தனது கருத்தை ஆணித்தரமாகக் விளக்கினார் நாவலர் பாரதியார். அதே நேரம், தமிழ் மறையாம், திருக்குறள் நூலுக்கு, பழைய உரையாசிரியர்கள் வழங்கியுள்ள பார்ப்பன ஆரியக் கருத்துக்களைக் கடுமையாகச் சாடியவர் நாவலர்”. “நச்சினார்க்கு இனியன் உமிழ்ந்த எச்சில் என்றால் அதை நக்கவா வேண்டும்?”- என்று கேட்டவர்!

நாவலர் பாரதியாருக்கு 1944 ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள், இவரது தமிழ்த் தமிழ்த் தொண்டைப் போற்றி, ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் மன்றம் ‘நாவலர்’ என்னும் பட்டமளித்துப் பெருமைப்படுத்தியது. அன்று முதற்கெண்டே, ‘சோமசுந்தர பாரதியார்’, ‘நாவலர் சோமசுந்தர பாரதியார்’ என்றழைக்கப்படலானார். (ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர்களால் பட்டமளித்துப் பாராட்டுப் பெற்ற ஒரே ஒரு தமிழ்நாட்டுப் புலவர் சோமசுந்தர பாரதியார் தான் என வரலாறு கூறுகிறது).


மதுரை ‘திருவள்ளுவர் கழகம்’ 17.01.1954 இல் பாராட்டு விழா நடத்தி ‘கணக்காயர்’ எனும் பட்டம் வழங்கியது.

தமிழுக்கும் தமிழகத்திற்கும் நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆற்றிய அருந்தொண்டுகளுக்காக, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 09.02.1955 இல் ‘டாக்டர்’ பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

“சமயம், சாதி, கொள்கை, நடைமுறை முதலிய பல துறைகளிலும் பல வேறுபட்ட வகுப்புவாதங்களில் மெலிந்து வரும் தமிழ்ச் சமுதாயம் ஒற்றுமை பெற்று உய்வதற்கு உரிய ஒரு பெருந்துணையாய் உதவக் கூடியது தாய் மொழியகிய தமிழேயாகும்!” என முழங்கிய நாவலர் சோமசுந்தர பாரதியார் 14.12.1959 ஆம் நாள் தமது எண்பதாம் வயதில் இமைகளை மூடினார்.

https://www.hindutamil.in/news/blogs/50658-10.html

நாவலர் சோமசுந்தர பாரதியார்



ராஜலட்சுமி சிவலிங்கம்

விடுதலைப் போராட்ட வீரரும், சிறந்த தமிழ் அறிஞருமான நாவலர் சோமசுந்தர பாரதியார் (Navalar Somasundara Bharathiar) பிறந்த தினம் இன்று (ஜூலை 27). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

l தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் (1879) பிறந்தார். இயற்பெயர் சத்தியானந்த சோமசுந்தரன். எட்டயபுரம் அரசியின் பராமரிப்பில் வளர்ந்தார். அரண்மனையில் பணியாற்றிவந்த சுப்பிரமணிய பாரதிக்கு நண்பரானார். இருவரும் இணைந்து பல நூல்களைக் கற்றனர். பாடல்கள் இயற்றினர். அரண்மனைக்கு வந்திருந்த ஈழப்புலவர் ஒருவர், இவர்கள் இருவருக்கும் 'பாரதி' என்ற பட்டத்தை வழங்கினார்.

l எட்டயபுரத்திலும், நெல்லை சிஎம்எஸ் கல்லூரி பள்ளியிலும் பயின்றார். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பி.ஏ. பட்டப்

படிப்பையும், சென்னை சட்டக் கல்லூரியில் இளநிலை சட்டப் படிப்பையும் முடித்தார்.

l வழக்கறிஞராகப் பணியாற்றிக்கொண்டே, முதுநிலை சட்டம் படித்து பட்டம் பெற்றார். சிறந்த வழக்கறிஞர் என்று புகழ்பெற்றார். ஆயிரக்கணக்கில் சம்பாதித்தவர் அதை விட்டுவிட்டு, வ.உ.சி.யின் அழைப்பை ஏற்று ரூ.100 சம்பளத்தில் அவரது சுதேசிக் கப்பல் கம்பெனியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார்.

l ஒத்துழையாமை இயக்கம், தீண்டாமை ஒழிப்பில் காந்தியடிகளைப் பின்பற்றியவர். நெல்லை, மதுரையில் காங்கிரஸ் கட்சி மாநாட்டைத் தலைமை ஏற்று நடத்தினார்.

l 'என்னிடம் 2 சரக்கு கப்பலோடு, 3-வதாக ஒரு தமிழ்க் கப்பலும் உள்ளது' என்று வ.உ.சி. பெருமிதத்துடன் இவரைக் குறிப்பிடுவார். வ.உ.சி., சுப்பிரமணிய சிவா மீதான வழக்குகளில் அவர்களுக்காக வாதாடினார்.

l காந்தியடிகளை முதன்முதலில் தமிழகத்துக்கு வரவழைத்து உரையாற்றச் செய்தார். தன் குடும்பத்தினரையும் விடுதலை இயக்கத்தில் பங்குபெறச் செய்தார். சுதந்திரப் போராட்டத்துக்கு நன்கொடையாக, குழந்தைகளின் நகைகளைக் கழற்றி காந்தியிடம் அளிக்கச் செய்தார். இந்தி எதிர்ப்பு மாநாடுகளில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

l அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராக பணியாற்றினார். தமிழ் இலக்கண, இலக்கிய ஆய்வுகளில் ஈடுபட்டார். தமிழ்க் கழகம் என்ற அமைப்பை நிறுவினார். 'தசரதன் குறையும் கைகேயி நிறையும்', 'அழகு', 'சேரர் தாயமுறை', 'தமிழும் தமிழரும்', 'திருவள்ளுவர்' உட்பட பல நூல்களையும், 5 ஆங்கில நூல்களையும் எழுதியுள்ளார். தமிழ் இலக்கண இலக்கி யங்கள், அரசியல், வரலாறு, தமிழர் நாகரிகம், பண்பாடு, மொழி பெயர்ப்பு என நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார்.

l தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகியவற்றுக்கு உரை எழுதினார். 'நான் கண்ட சுப்பிரமணிய பாரதி' என்ற நூலை

எழுதினார். மதுரை அடுத்த உசிலங்குளத்தில் தாழ்த்தப்பட்டோருக்கான தொடக்கப்பள்ளியை நிறுவினார்.

| இவரது தமிழ்த் தொண்டைப் பாராட்டி ஈழநாட்டுப் புலவர் மன்றம் 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கியது. திருவள்ளுவர் கழகம் 'கணக்காயர்' என்ற பட்டத்தையும், அண்ணாமலை பல்கலைக்கழகம் கவுரவ டாக்டர் பட்டத்தையும் வழங்கியது.

| சமூக சீர்திருத்தங்களில் ஈடுபாடு கொண்டவர். சடங்குகள் இல்லாத திருமண விழாக்களை முன்னின்று நடத்தினார். தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தின் மதுரை மாவட்டத் தலைவராக செயல்பட்டார். தமிழுக்கும், தமிழ் சமுதாயத்துக்கும் அருந்தொண்டுகள் ஆற்றிய நாவலர் சோமசுந்தர பாரதியார் 80 வயதில் (1959) மறைந்தார்.

தமிழ்த்தேசியன்

https://tamilthesiyan.wordpress.com/2017/07/27/%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%B2%E0%AE%B0%E0%AF%8D-%E0%AE%9A%E0%AF%8B%E0%AE%AE%E0%AE%9A%E0%AF%81%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B0-%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%AF-3/



நாவலர் சோமசுந்தர பாரதியார் பிறந்த நாள் 27.7.1879

1937ஆம் ஆண்டு காங்கிரசுக் கட்சி முதன்முறையாகத் தேர்தலில் போட்டியிட்டு பல்வேறு மாகாணங்களில் வெற்றி பெற்றது. அதில் சென்னை மாகாணமும் ஒன்று. அப்போதைய சென்னை மாகாண முதல்வர் இராசாசி வேறு எந்த மாகாண முதல்வரும் செய்யத் துணியாத காரியமொன்றைச் செய்தார். தொடக்கப் பள்ளிகளில் இனிமேல் இந்தி கட்டாயப் பாடமாக புகுத்தப்படும் என்று அறிவிப்பு செய்தார். அப்போது இந்தித்திணிப்பிற்கு எதிராக முதன்முறையாகத் தமிழறிஞர்கள் ஒன்று கூடிப் போர்க்குரல் எழுப்பினர்.

அக்காலத்தில் முப்பத்தைந்து ஆண்டு காலமாகக் காங்கிரசுக் கட்சிக்குத் தம்மை ஒப்படைத்து இந்திய விடுதலைக்குப் போராடி வந்த தமிழறிஞர் ஒருவர் அக்கட்சியிலிருந்து வெளியேறி தமிழறிஞர்களோடு இணைந்து போராடினார். அவர் வேறு யாருமல்லர்; நாவலர் என்றழைக்கப்படும் சோம சுந்தர பாரதியார் ஆவார். அவரின் வாழ்க்கை வரலாற்றை இனி காண்போம் .

எட்டையபுரத்து அரசரின் நன்மதிப்பைப் பெற்றுத் திகழ்ந்தவர் சுப்பிரமணிய நாயகர். இவர் சென்னையிலிருந்து எட்டையபுரத்திற்குக் குடிபெயர்ந்து வந்ததால் “எட்டப்ப பிள்ளை” என்று அழைக்கப்பட்டார் . எட்டப்ப பிள்ளை – முத்தம்மாள் இணையருக்கு மகனாக 27.07.1879 இல் பிறந்தவர்தாம் சோமசுந்தரம்.

எட்டையபுரம் அரண்மனையில் பணியாற்றி வந்த சின்னச்சாமி ஐயரின் மகன் சுப்பிரமணியனும் அரண்மனையில் வளர்ந்து வந்த சோமசுந்தரமும் சிறுவயது முதலே நல்ல நண்பர்கள் .தமிழ் மீதான ஆர்வமே இருவரையும் ஒன்று சேர்த்தது. இருவரும் இணைப் பறவையாய் பரந்த அரண்மனையில் பாடிப் பறந்து வலம் வந்தனர் .

எட்டையபுரம் அரண்மனைக்கு வருகை தரும் தமிழ்ப் புலவர்களின் பாடல் கேட்டு பா புனையும் ஆற்றலை இருவரும் பெற்றிருந்தனர் . ஒருமுறை யாழ்ப்பாணத்திலிருந்து புலவர் ஒருவர் அரண்மனைக்கு வந்தார் . அவர் இருவரிடமும் சென்று ஈற்றடி கூறி , பாடலொன்றை இயற்றித் தருமாறு வேண்டினார். இருவரும் எழுதுகோல் பிடித்து உடனடியாக அந்த ஈற்றடிக்கு பாடல் தந்தனர். அதனைப் படித்துப் பார்த்த யாழ்ப்பாணப் புலவர் மெய்சிலிர்த்து “இதுவன்றோ , அருமைப்பாடல் ” எனக்கூறி இருவருக்கும் “பாரதி” பட்டம் வழங்கிச் சிறப்பித்தார்.

அன்றுமுதல் சோமசுந்தரம் "சோமசுந்தர பாரதி" என்றும் அழைக்கப்பட்டார். 1905ஆம் ஆண்டு சென்னையில் சட்டத்தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற சோமசுந்தர பாரதியார் தூத்துக்குடிக்குச் சென்று வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார். அப்போது வ.உ.சி.யோடு நெருக்கம் கொண்டு பழகியதன் மூலம் இந்திய விடுதலையின் மீது தீராப் பற்றுக் கொண்டார்.

வ.உ.சி.தோற்றுவித்த கப்பல் நிறுவனத்திற்குப் பொறுப்பேற்று செயல்படவும் பாரதியார் துணிந்தார். அதன் காரணமாகவே , வ.உ.சி. "இரண்டு சரக்குக் கப்பலோடு சேர்த்து மூன்றாவதாக ஒரு தமிழ்க் கப்பலும் என்னிடமுண்டே" என்று விளையாட்டாக மற்றவரிடம் பேசுவதுண்டு. அதாவது "எஸ்.எஸ்.பாரதி " என்பதை (steam ship) "தமிழ்க் கப்பல் " என்று வ.உ.சி. விளித்துக் கூறுவது வழக்கம் . வ.உ.சி.யின் கப்பல் நிறுவனத்தை விட்டு நீங்கினால் பெரும் பதவி கிடைக்குமென்று ஆசை வார்த்தைகளை ஆங்கிலேயர் கூறி வந்தனர் . அவற்றுக்கு சோமசுந்தர பாரதியார் மயங்கிட மறுத்தார். மாறாக, ஆங்கிலேயர் வ.உ.சி. , சுப்பிரமணிய சிவா ஆகியோர் மீது தொடுத்த இராசதுரோக வழக்குகளை எதிர் கொண்டு வாதாடினார்.

காந்தியடிகள் சென்னைக்கு வந்த போது அவரை சோமசுந்தர பாரதியார் தூத்துக்குடிக்கு அழைத்துச் சென்று பொதுக் கூட்டங்களில் உரையாற்றும்படி செய்தார். காங்கிரசுப் பேரியக்கத்தில் தான் மட்டுமல்லாது , தம் புதல்வன் இலட்சுமிரதன் பாரதி , புதல்வி இலக்குமி பாரதி , மருமகன் கிருஷ்ணசாமி பாரதி ஆகியோரை ஈடுபடுத்தி சேவையாற்றும்படி கேட்டுக் கொண்டார்.

1933ஆம் ஆண்டு அண்ணாமலை அரசரின் வேண்டு கோளுக்கிணங்க வழக்கறிஞர் தொழிலைக் கைவிட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியராக பாரதியார் பொறுப்பேற்றார். அங்கு தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக தமிழ்ப் பணியாற்றி வந்த காலத்தில்தான் 1937ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு "தீ" கொழுந்து விட்டெரிந்தது.

10.8.1937இல் இராமகிருஷ்ண மடம் மாணவர் இல்ல விழாவில் உரையாற்றிய முதல்வர் இராசாசி "இந்தியில் பாடநூல்கள் விரைவில் எழுதப்படும் " என்று அறிவிப்பொன்றை வெளியிட்டார்.

27.8.1937இல் கரந்தை தமிழ்ச் சங்கம் சார்பில் த.வே.உமா மகேசுவரனாரும் , 29.08.1937இல் திருநெல்வேலித் தமிழ்ப் பாதுகாப்பு சங்கத்தின் சார்பில் மா.வே. நெல்லையப்பப் பிள்ளையும் இராசாசியின் இந்தித் திணிப்பைக் கண்டித்து முதல் குரல் எழுப்பினார். அதன் பிறகு இந்தித் திணிப்பிற்கு எதிரான குரலை சென்னையில் தொடங்கி வைத்த பெருமை சோமசுந்தர

பாரதியாரையே சாரும்.

05. 09.1937இல் சென்னை சௌந்தரிய மண்டபத்தில் பாரதியார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு திருவாளர்கள் இரா.பி.சேதுப் பிள்ளை, சுவாமி சகஜானந்தம் , 'ஜஸ்டிஸ்' இதழாசிரியர் டி.ஏ.வி.நாதன், சி.என்.அண்ணா துரை, பண்டிதை நாராயணியம்மாள் உள்ளிட்ட எண்ணற்ற தமிழ்ப் பெருமக்கள் வந்திருந்தனர். அக்கூட்டத்தின் தலைவராகிய பாரதியார் பின்வருமாறு உரை நிகழ்த்தினார்:

"இந்தி மொழி, இலக்கண இலக்கியச் சிறப்பில்லாத வெறுமொழி, அம்மொழி பயிலுவதால் தமிழ் மொழியும், தமிழர் நாகரிகமும் கெட்டு விடும். தமிழ்ப் பள்ளிக் கூடங்களில் இந்தியை கட்டாயப் பாடமாக்குவதைத் தமிழ் மக்கள் முழு வன்மையோடு கண்டித்து ஒழிக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் உடனே தீவிரமாய்ச் செய்திடல் வேண்டும். அதுவே தமிழர் வீரமுடையவர் என்பதைக் காட்டும். அவ் வெதிர்ப்பினால் ஏதாவது கேடு வருமானால் அதனை பெறத் தாம் முன்னணியில் இருப்பேன்" என்று இரத்தம் துடிதுடிக்கப் பேசினார்.

இந்தக் கூட்டத்தின் அடுத்த படிநிலையாக 04.10.1937இல் சென்னை கோகலே மண்டபத்தில் மாபெருங் கூட்டம் நடைபெற்றது. இதில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். "தமிழ்க் கடல் " மறைமலையடிகள் தலைமை தாங்கிய இக்கூட்டத்தில் பாரதியாரின் உரை கோடை இடியாய் அமைந்தது.காங்கிரசுத் தலைவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதி என்பதால் இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவதா? என்றும், முதல் மந்திரியாருக்கு தமிழ் மக்களுக்கு வாக்குறுதியளிக்க யாதொரு உரிமையும் இல்லையென்றும் கடுஞ்சினங் கொண்டு பேசினார்.

இதில் பரலி சு.நெல்லையப்பப் பிள்ளை, வச்சிரவேல் முதலியார், கே.எம்.பாலசுப்பிரமணியம், சி.என்.அண்ணாதுரை, முத்தையா முதலியார் ஆகியவர்கள் பங்கேற்று உரை நிகழ்த்தினர். இக்கூட்டத்தில் சட்டசபையிலும், நீதிமன்றங்களிலும், கல்லூரிகளிலும், அரசியல் அலுவல் கூடங்களிலும் தாய் மொழியாகிய தமிழ் மொழியிலேயே எல்லாக் காரியங்களும் நடைபெறுதல் வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

சென்னையில் நடைபெற்ற தொடர் இந்தி எதிர்ப்பு மாநாடுகள் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாக மாவட்டந்தோறும் இந்தி எதிர்ப்பு மாநாடுகள்

முளைவிடத் தொடங்கின. பல்வேறு ஊர்களுக்குப் பாரதியாரும் பயணம் மேற்கொண்டு வீர உரையாற்றி மக்களை எழுச்சி கொள்ளும்படி செய்தார்.

26.12.1937இல் பாரதியார் தலைமையில் திருச்சியில் நடைபெற்ற சென்னை மாகாண மூன்றாவது தமிழர் மாநாடு இந்தி எதிர்ப்புப் போரை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் சென்றது. 2500க்கும் மேற்பட்ட தமிழர்கள் பங்கேற்ற மாபெரும் பேரணி முதன்முறையாக நடைபெற்றது.
இந்த மாநாட்டில்தான் பெரியாரும் முதன்முறையாக பங்கு கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தனை மாநாடுகள் கூட்டியும், தீர்மானங்கள் நிறைவேற்றியும் கட்டாய இந்திப்பாட ஆணையைத் திரும்பப் பெற முடியாது எனும் ஆணவத்தில் இராசாசி உறுதியாய் இருந்தார். மேலும், இந்தி கட்டாயப் பாட ஆணை 21.04.1938இல் நடைமுறைக்கு வரும் என்று அறிவிப்பும் செய்தார். இந்நிலையிலே, திருச்சியில் 28.05.1938இல் கூடிய மந்திராலோசனைக் கூட்டத்தில் பாரதியார் " சத்தியாக்கிரகம் அதில் வெற்றி கிடைக்காவிடில் சட்ட மறுப்பு த் தொடங்க வேண்டியதைத் தவிர வேறில்லை" என்று போர் முரசம் கொட்டி முழங்கினார்.
உடனடியாக இந்தி எதிர்ப்பு வாரியம் உருவாக்கப்பட்டது. அதன் தலைவராகப் பாரதியார் அவர்களும், செயலாளராக கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களும், உறுப்பினர்களாக ஈ.வெ.ரா. , உமா மகேசுவரனார், ஊ.பு.சௌந்தர பாண்டியன், கே.எம்.பாலசுப்பிர மணியம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

பாரதியார் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு, நாள்தோறும் மறியல், நாள்தோறும் சிறை என்ற நிலைக்குப் போராட்டம் வளர்ந்தது. தொடர் போராட்டங்கள் இராசாசி அரசை கலங்கடிக்கச் செய்தது. இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் பெரியார் ஈ.வெ.ரா. தலைமையும் இருந்ததால் ஏராளமான தொண்டர்கள் போராடிச் சிறை சென்றனர். பெரியார் ஈ.வெ.ரா. தளைப்படுத்தப்பட்டு பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்தி எதிர்ப்புப் போரின் முடிவில் இரண்டு கோரிக்கைகள் தமிழர்களிடத்தில் வலுப்பெற்று நின்றன. 1) மொழிவழித் தமிழ் மாகாணம், 2)தமிழ்நாடு தமிழருக்கே ,இவ்விரண்டு கோரிக்கை உருவாக்கத்திலும் பாரதியாரின் பங்கு அளப்பரியது. தன் வாழ்நாளின் இறுதிவரை இக்கோரிக்கைகளின் மீது உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார்.

1937ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போரில் தான் மொழிவழி அடிப்படையில் தமிழ்த்தேசிய இனம் தன்னைத்தானே அடையாளங் கண்டது.
அப்போராட்டத்தின் மூலமாக உருவான மொழிவழி மாகாணக்

கோரிக்கையும், தமிழ்நாடு தமிழருக்கே முழக்கமும் அப் போராட்டத்தில் ஈடுபட்ட பெரியார் அவர்களால் (பெல்லாரி சிறையிலிருந்து வெளியே வந்த பிறகு) திராவிடன், திராவிட நாடு என்று மடைமாற்றம் செய்யப்பட்டது.

அந்த இந்தி எதிர்ப்புப் போரில் உருவான தமிழ் மொழி, தமிழின அடையாளத்தை இழக்க சோமசுந்தர பாரதியாருக்கு மனம் வரவில்லை. பெரியார் உருவாக்கிய ஆரியத்திற்கு எதிர்வகை குறியீட்டுச் சொல்லாகிய திராவிடத்தை சோமசுந்தர பாரதியார் ஒப்புக் கொள்ள மறுத்தார். ஆரியர் X தமிழர் என்பதே அவரது கொள்கை நிலைப்பாடாகும்.

1937ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போரில் “தமிழர் கழகம்” எனும் அமைப்பை நிறுவினார். தமிழ்மொழி ஆக்கத்திற்கும், இந்தி எதிர்ப்புக்கும், தமிழர் முன்னேற்றத்திற்கும் வெவ்வேறு பெயர்களில் அமைக்கப் பெற்ற இயக்கத்தினர்களெல்லாம் தமிழர் கழகக் கிளைகளை ஆங்காங்கே அமைக்க வேண்டுமென்று பாரதியார் பேரழைப்புக் கொடுத்தார். பிறகு ‘தமிழர் கழகம்’ எனும் இதே பெயரில் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் அமைப்பைக் கட்டிய போதும் அதன் தலைவராக பாரதியார் பொறுப்பு வகித்தார்.

1942 இல் பெரியாரின் திசை மாறிப்போன ‘திராவிடநாடு திராவிடர்க்கே’ முழக்கம் காதைப் பிளந்து வந்த நிலையில், சி.பா.ஆதித்தனார் ‘தமிழ் இராச்சியக் கட்சி’யை உருவாக்கினார். அப்போது அதனை மனமுவந்து தொடங்கி வைத்தவரும் பாரதியார் என்பது நினைவு கூரத்தக்கது.

நீதிக்கட்சியில் பெரியார், அண்ணா இருந்த போதும், தி.மு.க.வை அண்ணா உருவாக்கிய போதும் திராவிடம் குறித்தத் தமது மறுப்புக் கருத்தை பாரதியார் வெளிப்படுத்திய தருணங்கள் பல உண்டு.

14.3.1943இல் சேலத்தில் நடந்த ‘கம்பராமாயண எரிப்புப் போர்’ உரையாடலின் இறுதிப் பகுதியில் பாரதியார் கூறுகிறார்: “தமிழன் தன்னைத் தமிழெனன்று கூறிக் கொள்ள வெட்கப்பட்டுத் திராவிடன், திராவிடன் என்று தோள் குலுக்குவதா? திராவிடன் என்ற பெயர் சங்க நூலிலே ஏது? சுயமரியாதை, சுயமரியாதை என்று ஆரியமொழி பேசினார்கள். நான் சொல்லிச் சொல்லி இப்போதுதான் தன்மானம் என்று தமிழாகப் பேசுகிறார்கள்” என்று இடித்துரைத்தார்.

1950ஆம் ஆண்டு மே மாதம் 27, 28 நாட்களில் கோவையில் தி.மு.க. சார்பில் ‘முத்தமிழ் மாநாடு’ நடைபெற்றது. அதில் மாநாட்டுத் திறப்பாளராக கலந்து கொண்ட பாரதியார் அவர்கள் மீண்டுமொரு முறை திராவிடத்தின் மீது குட்டு வைத்துப் பேசினார். அது வருமாறு: “இந்நாளில் பலர் திராவிடர், திராவிடர் என்றே சொல்லி வருகிறார்கள். தமிழ்,

தமிழர் என்று சொல்ல வெட்கப்படுகிறவன் தமிழனாயிருக்க முடியுமா? அவன் இரத்தத்திலே எப்படி தமிழ் இரத்தம் ஓடும்? இனியாவது தமிழ் தமிழர் என்று சொல்லுங்கள். தமிழருக்குத் தமிழரே பகைவர்” என்றார்.

பாரதியாருக்கும் ஒரு படி மேலே சென்று அம்மாநாட்டிலே தூய தமிழ்க் காவலர் கு.மு.அண்ணல் தங்கோ ‘திராவிடம்’ என்ற சொல்லைக் கேட்டாலே காதில் நாராசம் பாய்ச்சியது போல இருக்கிறது என்று சொன்னாரே பார்க்கலாம். அண்ணாவோ பதைபதைத்துப் போனார். முத்தமிழ் மாநாடு திராவிடத்திற்கு விளக்கம் சொல்லும் மாநாடாக மாறிப் போனது.

1953ஆம் ஆண்டு அண்ணல் தங்கோ தமிழக எல்லைத் தற்காப்பு மாநாட்டை நடத்தினார். கருணாநிதி, கி.ஆ.பெ.விசுவநாதம், பாரதிதாசன், கா.அப்பாத்துரையார், டார்பிடோ சனார்த்தனம், திருக்குறள் முனுசாமி ஆகியோர் பங்கு கொண்ட மாநாட்டில் அதன் தலைவராகிய பாரதியார் , “நாம் தமிழர்! நமது இனம் தமிழினம்! நமது நாடு தமிழ்நாடு! தமிழ்நாடு தான் நமது குறிக்கோள்! மொழிவழியாகப் பிரிந்து விட்ட போது திராவிடம் என்பதில் பொருள் இல்லை, திராவிடம் என்பது தமிழ்ச் சொல்லே அன்று” என்று பேசிய போது கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. அதற்குக் காரணம் கூட்டத்திலே பங்கு பெற்றவர்கள் கி.ஆ.பெ.விசுவநாதம் தவிர, மற்ற ஏனையோர் திராவிடச் சார்பாளர்கள் என்பதே உண்மையாகும்.

திராவிட இயக்கத்தவரின் ஆரிய எதிர்ப்பில் உடன்பாடு கொண்டவராக இருந்த போதிலும், அந்த ஆரிய எதிர்ப்பையும் கூட தாம் சுய மரியாதை இயக்கத்தால் கற்றுக் கொள்ள வில்லை என்பதை தெளிவுபடுத்தி கூறவும் பாரதியார் துணிந்தார். அது வருமாறு: “ஆரியருக்கு அடிமைப்படாத எண்ணம் எனக்கு 40 ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டது. சுயமரியாதை இயக்கம் தோன்றுவதற்கு முன்பே இருந்தது. என்னுடைய 14 வயதில் திருமணம் நடைபெற்றது. என்னுடைய சிவநெறி வேறு. இன்று சைவப்பண்டிதர் கூறும் சைவமல்ல, உண்மையே எனக்குச் சிவம். எனக்குத் திருமணம் பார்ப்பனரை வைத்து செய்வதாகக் கூறினார்கள். சைவ ஆகமங்களின் படி பார்ப்பனர்கள் சண்டாளர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. கோயில்களிலே அவர்கள் துவஜஸ்தம்பத்துக்கு (கொடி மரத்துக்கு) அப்புறம் நுழையக் கூடாது. வந்தால் தீட்டாகி விடும் என்று ஆகமம் கூறுவதால் அப்படிப்பட்ட சண்டாளர்களைக் கொண்டு திருமணம் செய்யாமல் சைவ குருக்களை வைத்து திருமணம் செய்தேன். எனது சிறிய வயதிலேயே எனக்கு அந்த நோக்கம் இருந்தது. சுயமரியாதை இயக்கத்தாலோ, அண்ணாதுரையாலோ அந்த நோக்கம் எனக்கும் வரவில்லை. அது முதற்கொண்டு இதுவரை நான் தமிழருக்கு தன்மானம் வரவேண்டுமென்று உழைத்து வந்திருக்கின்றேன்.”

பாரதியார் தமிழ் நூல்களிலே உள்ள ஆரியத்திற்கு வலுசேர்க்கும் கருத்துகளை புறந்தள்ள வேண்டுமென்று வற்புறுத்தும் அதே வேளையில் நல்ல கருத்துகள் இருக்கும் பட்சத்தில் போற்றிடவும் தயங்கக் கூடாது என்பார்.

தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர் நச்சினார்க்கினியர். அறிவாகிய கடவுளுக்கு 6 முகம் உள்ளது, 12 கையுள்ளது என்று கூறுவது எப்படிப் பொய்யோ, அப்படித்தான் நச்சினார்க்கினியர் உரையும். நச்சினார்க்கினியன் உமிழ்ந்த எச்சில் என்றால் அதை நக்கவா வேண்டும்? என்று கடுமையாகச் சாடினார். (நச்சினார்க்கினியர் ஒரு பிராமணர், தொல்காப்பியத்திற்கு ஆரிய மரபு சார்ந்த சில விளக்கங்கள் தந்தவர்)
அதே பாரதியார்தாம் அண்ணா கம்ப ராமாயணத்தை எரிக்கும் முயற்சியில் ஈடுபட்ட போது அதை வன்மையாகக் கண்டித்தார். அப்போது அவர் "ஒரு சிறந்த காவியத்தை எரிப்பது நல்லதன்று. அது தமிழ் நெறியன்று. ஆபாசக்கருத்துகளை எரிக்கச் செய்யப்படும் முயற்சிக்கு வேண்டுமானால் நான் துணை நிற்பேன். அருந்தமிழ் நூலை எரிப்பதால் ஆபாசக் கருத்தை எப்படி அழிக்க முடியும்? கம்பனைப் போல் சிறந்த கவியை கண்டதில்லை " என்று கம்பனைப் போற்றினார். இன்று கம்பன் கவி நயத்தை, தமிழ் அமுதை கலைஞர் கருணாநிதி உள்ளிட்ட திராவிட இயக்கத்தவர்கள் பலரும் போற்றுவதைப் பார்க்கிறோம்.

தசரதன் குறையும் கைகேயி நிறையும், அழகு சேரர் தாய முறை, சேரன் பேரூர், தமிழும் தமிழரும், திருவள்ளுவர், தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை ஆகியவை நாவலர் சோமசுந்தர பாரதியார் எழுதிய நூல்களில் மிக முக்கியமானவையாகும்.

27.07.1959 அன்று பாரதியாரின் 80வது அகவை நிறைவு விழா மதுரையில் தமிழ்ச்செம்மல் கி.பழனியப்பனார் (பழ.நெடுமாறன் அவர்கள் தந்தையார்) முயற்சியில் வெகு சிறப்பாக நடத்தப்பட்டது.

அந்நிகழ்வே நாவலர் பாரதியாரின் இறுதி நிகழ்வாகும். 14.12.1959இல் அவர் தமது தமிழ் மூச்சை நிறுத்திக் கொண்டார்.

அவர்காட்டிய வழியில் ஆரியத்தை வீழ்த்திட, திராவிடத்தைப் புறந்தள்ளிட , தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்திட உறுதி ஏற்போம். நாவலர் பாரதியாரை தமிழர்களிடம் கொண்டு செல்வோம்.



Featured Post

தமிழ்நாடு பெயர் மாற்ற தீர்மான நாள் 18.7.1967

சட்டமன்றத்தில் தமிழ்நாடு பெயர் மாற்ற தீர்மான நாள் 18.7.1967

உண்மை வரலாறு!

(1956ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் மொழிவழித் தமிழ் நாடு உருவாக்கப்பட்ட நாளாகும்.

மார்சல் நேசமணி, குஞ்சன் நாடார், மங்கலங்கிழார், ம.பொ.சிவஞானம் போன்றவர்களின் போராட்டங்களால் அண்டைய தேசிய இனங்களால் பறிக்கப்பட்ட தமிழக எல்லைகள் ஓரளவு மீட்கப்பட்டன.

நவம்பர் 1ஆம் நாளை தமிழகப் பெருவிழாவாக ஒவ்வொரு ஆண்டும் தமிழ்த் தேசியர்கள் கொண்டாடி வருகின்றனர். கடந்த எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியில் இதற்கு ஏற்பு வழங்கப்பட்ட து. ஆனால் தற்போதைய ஸ்டாலின் ஆட்சியில் “தமிழ் நாடு நாள்” சூலை 18க்கு என்று மாற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பிறந்த நாளை விட, தமிழ் நாடு பெயர் சூட்டிய நாளை கொண்டாடுவது தான் சிறப்பு என்று ஸ்டாலின் அரசு விளக்கம் தருவது ஏற்கத்தக்கதல்ல.

தமிழக எல்லை மீட்புப் போரில் திராவிட இயக்கம் தலைமை தாங்கிப் போராட வில்லை என்பதை உண்மையான வரலாறு படித்தோர் அறிவர்.

சூலை 18இல் தமிழ்நாடு பெயர் சூட்டியது அண்ணாவின் ஆட்சி என்பதால் வேறு நாளுக்கு மாற்றுவது என்பது எல்லை மீட்கப் போராடிய தலைவர்களின் ஈகத்தை மறைக்கின்ற முயற்சியாகும்.

குழந்தை பிறந்த நாளை கொண்டாடுவது தான் எல்லோரும் கடைபிடிக்கும் மரபு. குழந்தைக்குப் பெயர் சூட்டிய நாளை கொண்டாடுவதை அறிவார்ந்த செயலாக பார்க்க முடியாது என்பது மட்டுமல்ல; அது வரலாற்றை மறைக்கும் நோக்கம் கொண்டதாகவே கருதப்படும்.

தமிழ்நாடு பெயர் சூட்டிய வரலாறும் கூட திராவிட இயக்கத்திற்கே உரித்தான ஒன்றல்ல. திராவிடம் இயக்கத்தைச் சாராதவர்களும் மிக அதிகமாக பங்கு வகித்துள்ளனர். அதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.)

தமிழ்நாடு பெயர் மாற்ற வரலாறு!
– கதிர் நிலவன்

1956ஆம் ஆண்டு மொழிவழி மாநிலங்கள் உருவாக்கப்பட்டப் பிறகு, ஹைதராபாத்தும் இதரப் பகுதிகளும் சேர்ந்து ‘ஆந்திரப் பிரதேசம்’ என்றும் திருவிதாங்கூரும் இதரப் பகுதிகளும் சேர்ந்து ‘கேரளம்’ என்றும் அழைக்கப்பட்டது.

ஆனால், எஞ்சிய சென்னை மாகாணம் உள்ளிட்ட திருவிதாங்கூர் தமிழர் பகுதிகளோ 11 ஆண்டுகளாகியும் தமிழ்நாடாக மாறவில்லை.

இங்கு மொழிவழித் தேசிய உணர்வை ஊட்ட மறுத்த இந்தியத் தேசியமும், திராவிடத் தேசியமும் தமிழர்களை விழிப்படைய செய்யாமல் தூங்க வைத்ததே இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம்.

தமிழ்நாடு என்ற பெயர் எவர் ஒருவரோ முன்மொழிந்து தமிழர்கள் மீது திணிக்கப்பட்ட பெயரல்ல. இது இரண்டாயிரம் ஆண்டுகளாக வரலாறு தொட்டு அழைக்கப்பட்டு வந்த பெயராகும்.

சங்க இலக்கியங்களிலும், பிற்கால இலக்கியங்களிலும் தமிழகம், தமிழ்நாடு என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

” வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுகம்” என்று தொல்காப்பியமும்

“தண்டமிழ் வேலி தமிழ்நாட்டு அகமெல்லாம்” என்று பரிபாடலும்

“இமிழ் கடல் வேலி தமிழகம்” என்று பதிற்றுப்பத்தும்

“தென்தபிழ் நாடு” என்று சிலப்பதிகாரமும்

” சம்பூந் தீவினுள் தமிழக மருங்கில்” என்று மணிமேகலையும்

தமிழ் நிலம் குறித்த பெயர்களை குறிப்பிடுகின்றன.

பிரித்தானியரின் ஆட்சியில் வாழ்ந்த சுப்பிரமணிய பாரதியாரும்

“நித்தம். தவம் செய்யும் குமரி எல்லை – வட மாலவன் குன்றம் மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு” என்று தமிழகத்தின் எல்லையையும், பெயரையும் ஒருசேர குறிப்பிடுகிறார்.

பல்வேறு அந்நிய ஆட்சியாளர்களின் நுகத்தடியில் தமிழகம் சிக்குண்ட காரணத்தால் தமிழர் நிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டமுடியாத அவல நிலை தொடர்ந்து நீடித்து வந்தது.

பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்ட இந்திய மக்களிடம் ஏற்பட்ட மொழிவழி உணர்ச்சியும், மொழிவழி மாநிலக் கிளர்ச்சியுமே தத்தமது இனத்தின் நிலப்பெயர்கள் சூட்டும் நிலையை உருவாக்கியது.

தமிழகத்தில் 1938இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் ஊடாக “தமிழ்நாடு தமிழருக்கே” கோரிக்கை எழுப்பப்பட்ட போதிலும் அது தொடர்ந்து வலுப்பெறவில்லை. அது வெற்றி பெற்றிருந்தால் ” தமிழ்நாடு” என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கும்.

அந்தப் போராட்டம் திராவிட இயக்கத்தவர்கள் கைகளுக்கு சென்று திராவிட நாடாக திசை மாறிப் போனதால், தமிழ்நாடு என்ற பெயரைக்கூட சூட்ட முடியாமல் போனது.

1952இல் ஆந்திரர்கள் விசால ஆந்திரம் கோரிக்கையை தீவிரப்படுத்தி போராடி வெற்றி பெற்றனர். அப்போது தான் தமிழர்கள் வாழும் நிலப்பரப்பிற்கு தமிழ்நாடு என்ற பெயரை சூட்டும் கோரிக்கை மீண்டும் புத்துயிர் பெற்றது.

21.07.1953இல் காங்கிரஸ் சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்த ம.பொ.சி. அவர்கள் முதன் முறையாக இக் கோரிக்கையை எழுப்பி, "எஞ்சிய சென்னை மாகாணம் அப்படியே இருக்கட்டும் என்று சொல்லப்படுகிறது. ஏன் அப்படியே இருக்க வேண்டும்? தமிழ் ராஜ்ஜியம் என்ற பெயர் வைக்கின்ற அளவுக்கு மற்ற தென் கன்னடம், மலையாள ஜில்லாக்களைப் பிரித்து இதை அமைத்தால் என்ன கெட்டுப் போய்விடும்?" என்று பேசினார்.

அதன் பிறகு 27.04.1954 இல் சென்னை மாகாண தமிழ்ச்சங்கம் பெண்ணாடத்தில் ஆட்சிமொழி மாநாடு நடத்தியது. அந்த மாநாட்டில் சட்ட மேலவை உறுப்பினர் அ. கசபதி நாயகர் தலைமை தாங்கிட, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் தமிழ்க்கொடி ஏற்றினார்.

அதில், "தமிழகத்திற்கு தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்றும், ஆந்திரம் பிரிந்த சென்னையை" தமிழ்நாடு என்று அழைக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பபட்டது.

அதேபோல் இச்சங்கம் 31.05.1954இல் திருநெல்வேலியில் நடத்திய மாநாட்டிலும் " தமிழ்நாடு" பெயர் மாற்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1934இல் சென்னை மாகாண தமிழ்ச் சங்கத்தை நிறுவியவர் தமிழறிஞர் கா.சு. பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது.

03.03.1955இல் முத்துராமலிங்கத் தேவர் அவர்களும் சட்டமன்றத்தில் வரவு – செலவு அறிக்கை விவாதத்தில், இக்கோரிக்கையை ஆதரித்து "இன்றைக்கு இந்த ராஜ்யத்தில் தமிழர் ஆட்சி வந்துவிட்டதென்று வெளியே பேசப்படுகிறது. அதோடு பச்சைத் தமிழர் ஆட்சி ஏற்பட்டு விட்டதாகவும் சொல்லப்பட்டு வருகிறது. இந்தப் பச்சைத் தமிழர்களுடைய ஆட்சியில் இந்த ராஜ்யம் தமிழ்ராஜ்யம் என்று அறிவிக்கப்பட வில்லையானால் என்ன பயன்?" என்று கேள்வி எழுப்பினார்.

29.11.1955இல் ம.பொ.சி.யின் தமிழரசுக் கழகத்தின் செயற்குழுவில் "தமிழ் மக்கள் வாழும் பிரதேசத்தை – மெட்ராஸ் ஸ்டேட்" என்றழைக்கப்படுவதை எதிர்க்கிறது. மத்திய மாநில அரசுகள் ராஜ்ஜியத்தின் பெயரைத் தமிழ்நாடு என்று பெயரிடப்பட வேண்டும் " என்று அழுத்தமாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு மொழிவழி மாநிலமாக 1956 நவம்பர் 1இல் அறிவிக்கப்பட்டாலும் அவ்வாண்டின் தொடக்கம் முதலே தமிழ்நாடு பெயர் மாற்றத்திற்கானப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வந்தது.

தமிழர் பகுதிகளான தேவிகுளம், பீர்மேட்டை கேரளத்திற்கு வழங்கிய பசல் அலி ஆணையத்தைக் கண்டித்து ம.பொ.சி. அவர்கள் 27.01.1956இல் திரு. ஜி. உமாபதி (சென்னை மாவட்ட தமிழரசுக் கழகத் தலைவர்) வீட்டில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார். இக்கூட்டத்தில் அண்ணா, இரா. நெடுஞ்செழியன் (தி.மு.க.), ம.பொ.சி, தி.க. சண்முகம், ஜி. உமாபதி, சின்ன அண்ணாமலை (தமிழரசுக் கழகம்), ப. ஜீவானந்தம், மணலி கந்தசாமி (கம்யூனிஸ்ட் கட்சி), க.இரா. நல்லசிவம், எம். சின்னச்சாமி, ப.சு. சின்னத்துரை (பிரஜா சோசலிஸ்ட் கட்சி) , சர்.பி.டி. இராசன் (ஜஸ்டிஸ் கட்சி), கே. விநாயகம் (வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுத் தலைவர்), பாவேந்தர் பாரதிதாசன், சி.பா. ஆதித்தனார், நாரண துரைக்கண்ணன், பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் உள்ளிட்ட பலர் இதில் பங்கேற்றனர்.

தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை மீட்பதற்காக இந்தக் கூட்டம் நடத்தப்பட்ட போதிலும் பல்வேறு கட்சித் தலைவர்கள் வலியுறுத்தலுக்கு இணங்க தமிழ்நாடு பெயர்மாற்ற கோரிக்கையும் விவாதிக்கப்பட்டது.

அக்கூட்டத்தில், தமிழக எல்லைகளை மறு வரையறை செய்தல், தட்சண பிரதேச திட்டத்தை எதிர்த்தல், சென்னை மாகாணத்திற்கு தமிழ்நாடு பெயர் சூட்டுதல் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி 20.02.1956இல் முழு அடைப்புப் போராட்டம் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

அனைத்துக் கட்சிகள் இணைந்து நடத்திய இந்தப் போராட்டம் பெரும் வெற்றி பெற்றது. இந்த முழு அடைப்புப் போராட்டத்தை திராவிடர் கழகமும், காங்கிரசுக் கட்சியும் புறக்கணித்தன.

அப்போது காமராசர் தலைமையிலான காங்கிரசுக் கட்சி தமிழக எல்லைகளை மீட்பதிலும், தமிழ்நாடு பெயர் சூட்டுவதிலும் எதிரான நிலைப்பாட்டையே கடைபிடித்தது.

தமிழ்நாடு என்ற பெயரைச் சூட்டினால் வெளி நாட்டினரும், வட நாட்டினரும் புரிந்து கொள்ள முடியாது என்றும், “மெட்ராஸ் ஸ்டேட் ” என்று அழைத்தால் தான் வெளி உலகுக்கு தெரியும் என்றும் அது வாதிட்டது .

28.03.1956இல் சட்டமன்றத்தில் மாநிலங்கள் மறுசீரமைப்பு வரைவுத் தீர்மானம் அறிமுகம் செய்யப்பட்டது.

அப்போது கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பேசிய ப. ஜீவானந்தம் அவர்கள் "மொழிவழியாக மாநிலங்கள் பிரிக்கப்படும் பொழுது இந்திய தேசம் சுக்குநூறாக உடைந்து விடாது" என்றும் "வளர்ந்து வரும் ஜனநாயகத்திற்கேற்ப சென்னை ராஜ்ஜியத்தை தமிழ் நாடு என்று ஏன் அழைக்கக் கூடாது?" என்றும் கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து நடைபெற்ற அக்கூட்டத் தொடரில் பங்கேற்ற எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ. வேலு, சி. கந்தசாமி, ஏ. இரத்தினம், கே.ஆர். நல்லசிவம், கே. விநாயகம், கே.டி. இராஜீ ஆகியோரும் தமிழ்நாடு பெயரை உடனடியாக சூட்ட வேண்டும் என்று வாதிட்டனர்.

பிரஜா சோசலிஸ்ட் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் தமிழக சட்டமன்றத்தில் தொடர்ந்து வலியுறுத்திய நிலையில், காங்கிரசு கட்சிக்குள்ளும் ஒரு கலகக்குரல் எழுந்தது.

முதுபெரும் விடுதலைப் போராட்ட வீரரும், காந்தியவாதி என்று அறியப்பட்ட க.பெ. சங்கரலிங்கனார் அவர்கள் 27.07.1956இல் விருதுநகரில் தமிழ்நாடு பெயர் மாற்றம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சாகும் வரை உண்ணாநிலைப் போராட்டத்தை தொடங்கினார். காங்கிரசு கட்சி அவரின் போராட்டத்தை கண்டுகொள்ள மறுத்தது.

காங்கிரசின் இந்தப்போக்கு குறித்து வேதனைப்பட்ட சங்கரலிங்கனார் அவர்கள் சாகும் தருவாயில், ஜனசக்தி துணையாசியர் ஐ. மாயாண்டி பாரதிக்கு கடிதம் எழுதினார். அதில் "காங்கிரஸ் ஆட்சியின் கொடுமை கடுமையாகி விட்டது. காந்தியம் மடிந்து கொண்டு வருகிறது. துரோகிகள் ஆட்சியில் உயிரோடு வாழ மனமில்லை" என்று எழுதினார். அவரை அண்ணா, ஜீவானந்தம், ம.பொ.சி. ஆகியோர் சந்தித்து உண்ணாநிலையை கைவிடுமாறு கேட்டுக் கொண்டனர். அவரோ உண்ணாநிலையை கைவிட மறுத்து 79ஆவது நாளில் உயிர் நீத்தார்.

1957ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாடு பெயர் மாற்றம் ஒலித்த போதிலும், காங்கிரசு கட்சியே வெற்றி பெற்றது. முதன்முதலில் சட்டமன்றத்தில் பங்கேற்று வெற்றி பெற்ற தி.மு.க. உறுப்பினர்கள் தமிழ்நாடு பெயர் மாற்றம் குறித்து சட்டமன்றத்தில் மட்டுமே வலியுறுத்தி பேசி வந்தனர்.

ஆனால், தமிழ்நாடு பெயர் மாற்றத்தை களப் போராட்டமாக விரிவுபடுத்திய பெருமை ம.பொ.சி. யையே சாரும்.

25.12.1960இல் சென்னை கோகலே மன்றத்தில் தமிழ்நாடு பெயர் மாற்றச் சிறப்பு மாநாட்டை முதன்முதலாக ம.பொ.சி. நடத்தினார். அந்த மாநாட்டிலே காந்தியார் நினைவு நாளில் 30.01.1961இல் மாநில அரசு அலுவலகங்கள் முன்பு தமிழரசுக் கழகம் சார்பில் சத்தியாகிரகப் போர் நடத்தப் போவதாக அறிவிப்பை வெளியிட்டார்.

அப்போது இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஊடகத்துறையின் கவனத்தை பெரிதும் ஈர்த்தது. தமிழக ஏடுகளான தினத்தந்தி, தமிழ்நாடு, ஆனந்த விகடன், குமுதம், தினமலர் ஆகியவை தமிழ்நாடு பெயர் மாற்றப் போராட்டத்திற்கு ஆதரவளித்தன. ஆனால் இந்து ஏடோ தமிழ்நாடு பெயர் மாற்றத்தினால் தேச ஒற்றுமை குலைந்து விடும் என்றும், மொழிச் சிறுபான்மையினருக்கு அச்சமூட்டும் என்றும் கடுமையாக எதிர்த்தது.

அது மட்டுமல்லாமல், தமிழ் மன்றங்களிலும், கல்லூரிகளிலும் தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உள்ளாட்சி மன்றங்களிலும் இதைப் போன்று தீர்மானம் கொண்டுவரப்பட்டன. அப்போது காமராசர் தலைமையிலான காங்கிரசு அரசு அதனை கடுமையாக எதிர்த்ததோடு பெயர் மாற்றத் தீர்மானம் போட்ட உள்ளாட்சி அமைப்புகளை கலைத்து விடுவதாக மிரட்டல் விடுத்தது. இதனைக் கண்டித்து தினமணி, மெயில், இந்து போன்ற ஏடுகள் தலையங்கம் தீட்டின.

பிரபல நாடகப் பேராசிரியர் பம்மல் சம்மந்த முதலியார் அவர்களும் தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கையை ஏற்குமாறு அரசுக்கு வேண்டுகோள் விடுத்து அறிக்கை விட்டார்.

1961சனவரி 30ஆம் நாள் தமிழரசுக் கழகம் போராட்டத்தை தொடங்கியது. சென்னை, காஞ்சி, குடந்தை, வேலூர், திருச்சி, மதுரை, நாகர்கோயில், பழனி, தூத்துக்குடி, காரைக்குடி, திருவள்ளூர் ஆகிய ஊர்களில் போராட்டம் நடத்திய தமிழரசுக் கழகத் தலைவர்களாகிய நாடகக்கலைஞர் ஔவை சண்முகம், கு.சா. கிருஷ்ண மூர்த்தி, கவிஞர் கா.மு. செரீப், கு.மா. பாலசுப்பிரமணியம், இயக்குநர் ஏ.பி. நாகராசன், கலைக் காவலர் எம்.ஏ. வேணு, புலவர் கீரன், கோ. கலிவரதன், நாடகக் கலைஞர்கள் உடையப்பா , அவரது மனைவி வீரலெட்சுமி உடையப்பா, திருமதி சரோஜினி நாராயணசாமி, “அருட்பா அரசி” குருவாயூர் பொன்னம்மாள் உள்பட 1,700 பேர் கைது செய்யப்பட்டனர்.

அன்றைக்கு சட்டமன்றத்தில் நுழைய முயன்ற காமராசரின் காரை மறித்தும் தொண்டர்கள் போராட்டம் நடத்தினர். அதன்பிறகும் தொடர்ந்து அமைச்சர்களுக்கு கறுப்புக்கொடி போராட்டம், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக மறியல் போராட்டம் என்று 18 நாட்கள் போராட்டம் நீடித்தது குறிப்பிடத்தக்கது.

ம.பொ.சி. போராட்டம் நடத்திய அதே நாளில்தான் பிரஜா சோசலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பி.எஸ். சின்னத்துரை அவர்கள் தமிழ்நாடு பெயர் மாற்றம் கோரி கொண்டுவந்த தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அவர் இந்த தீர்மானத்தை ஐந்து மாதங்களுக்கு முன்பே கொடுத்திருந்தும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாமல் காங்கிரசு அரசு காலம் கடத்தி வந்தது. அன்றைய விவாத நாளிலும் ம.பொ.சி.யின் போராட்டத்தை காரணங்காட்டி தீர்மானம் ஒத்தி வைக்கப்பட்டது.

அன்றைக்கு ம.பொ.சி. நடத்திய மறியல் போராட்டமும் பிரஜா சோசலிஸ்ட் சட்டமன்ற உறுப்பினர் சின்னத்துரை கொண்டு வந்த பெயர் மாற்றத் தீர்மானமும், அவருக்கு ஆதரவாக தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் வெளிநடப்பும் காமராசர் அரசை கடும் நெருக்கடிக்கு உள்ளாக்கியது.

24.02.1961இல் நடந்த சட்டமன்ற விவாதத்திற்குப் பிறகு, சென்னை மாகாணம் இனிமேல் ஆங்கிலத்தில் “MADRAS STATE” என்றும், தமிழில் “தமிழ்நாடு” என்றும் அழைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

தமிழிலும், ஆங்கிலத்திலும் ‘தமிழ்நாடு’ என்று ஒரே பெயரில் மாற்றம் செய்வதற்கு சட்டமன்றத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றி, அதனை அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தும்படி தில்லி அரசைக் கேட்டுப் பெறுவதற்குப் பதிலாக இப்படியொரு சமரசத்தை காங்கிரசு அரசு அன்றைக்கு மேற்கொண்டது.

அதன் பிறகு தமிழர்களின் விருப்பமான அரசியல் சட்டத் திருத்தக் குரலுக்கு தமிழரல்லாத ஒருவர் வலு சேர்த்தார். அவர் பெயர் பூபேஷ் குப்தா. அவர் கம்யூனிஸ்ட் கட்சியின் மேலவை உறுப்பினர். 1962 ஆம் ஆண்டு தில்லி நாடாளுமன்ற மேலவையில் தமிழ்நாடு பெயர் மாற்ற தீர்மான வரைவை அவர் தான் முதன் முதலில் கொண்டு வந்தார். இதற்கு சட்டமன்றத் தீர்மான ஒப்புதல் அளிக்கப்படாமல் இருப்பதாகக் கூறி, பூபேஷ் குப்தாவின் தீர்மானம் நாடாளுமன்ற மேலவையில் நிராகரிக்கப்பட்டது.

1962ஆம் ஆண்டுத் தேர்தலிலும் காங்கிரசு கட்சி வெற்றி பெற்றதால் தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கைக்கு மக்களின் ஆதரவில்லையென காங்கிரஸ் கட்சி தொடர்ந்து பொய்ப் பரப்புரையில் ஈடுபட்டு வந்தது.

1964ஆம் ஆண்டு தி.மு.க.வைச் சேர்ந்த இராம. அரங்கண்ணல் மீண்டும் பெயர் மாற்றத் தீர்மானத்தை சட்டமன்றத்தில் கொண்டு வந்தபோது “அது முடிந்தபோன விசயம்” என்று காங்கிரசு அரசு கை கழுவியது.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் காமராசர் அதிகம் பேச மாட்டார். ஆனால், அன்றைய நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியத்தை தன்னுடைய குரலில் அதிகமாக பேச வைத்தார். சி. சுப்பிரமணியம் சாமர்த்தியமாக சில பதில்களை கூறுவதில் வல்லவர் ஆவார்.

அவர் கூறுகிறார்; “மெட்ராஸ் என்பது ஆங்கிலப் பதம். தமிழில் அதை மெட்ராஸ் என்று அழைக்காமல் சென்னை நகரம் என்று தானே அழைக்கிறோம். சென்னை நகரத்தின் பெயரை மாற்ற வேண்டும் என்று ஒருவரும் கூறவில்லையே?” ஆங்கிலத்தில் மெட்ராஸ் ஸ்டேட் இருக்கட்டும், தமிழில் தமிழ்நாடு இருக்கட்டும் என்பதுதான் இதன் பொருளாகும்.

1952 முதல் 1967 வரை தமிழகத்தில் ஆட்சி நடத்தியது மட்டுமல்லாமல், மொழிவழி மாநிலம் பிரிக்கப்படாத கால கட்டத்திலே , தமிழ்நாடு என்ற பெயரை கட்சியின் பெயரில் சுமந்து நின்ற காங்கிரசு கட்சி ‘தமிழ்நாடு’ பெயர் மாற்றக் கோரிக்கையை நிராகரித்ததன் மூலம் அது வரலாற்றில் தீராப் பழியை தேடிக் கொண்டது.

1967இல் அண்ணா ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் தமிழர்களின் இந்த நீண்ட நாள் கோரிக்கைக்கு சட்ட ஏற்பு வழங்கப்பட்டது.

அப்போது சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ம.பொ.சி. சென்னை ராஜ்ஜியத்தியத்தின் பெயரை “தமிழ்நாடு” என பெயர் மாற்றக் கோரும் தீர்மானத்தை கொண்டு வந்தார். அண்ணாவோ நானே இதை அரசின் சார்பாக கொண்டு வருவதாக உறுதி கூறியவுடன் ம.பொ.சி. தீர்மானத்தை திரும்பப் பெற்றார்.

18.07.1967இல் அண்ணா அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றினார். இத்தீர்மானம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு 20.12.1968இல் குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெறப்பட்டது

அண்ணா சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தபோது காங்கிரசு கட்சி அப்போதும் அரைகுறை மனதோடுதான் இத்தீர்மானத்தை ஆதரித்தது.

பெரியார் தமிழ்நாடு பெயர் மாற்ற பிரச்னையில் குழம்பிய நிலையிலும், மற்றவரை குழப்பிய படியும் இருந்துள்ளார்.

1964ஆம் ஆண்டு சூலை 23ஆம் நாள் தி.மு.க. உறுப்பினர் இராம. அரங்கண்ணல் "தமிழ் நாடு" பெயர் மாற்றம் கோரி தீர்மானம் கொண்டு வந்த நிலையில், பெரியார் தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கையை ஆதரிக்க வில்லை. இராம. அரங்கண்ணல் அவர்கள் தமது உரையில் பெரியாரை "இரண்டு கெட்டான்" என்று குறிப்பிட்டு பேசியுள்ளார். அது பின் வருமாறு:

"ஈரோட்டுப் பெரியாரைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஈரோட்டுப் பெரியாருக்கு நாங்கள் என்றைய தினமும் எங்களை ஆளாக்கியவர் என்பதால் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். ஆனால், இன்றைய தினம் ஈரோட்டில் இருக்கிற எங்கள் பழைய தலைவர் இரண்டுங் கெட்டனாக இருந்து கொண்டிருக்கிறார். அதே பாதையில் தான் நம்முடைய தட்சிண மூர்த்தி கவுண்டர் அவர்கள் பதிலும் இங்கே இருந்தது. தமிழகம் வேண்டும் என்றும் சொன்னார். அதே சமயம் என் தீர்மானத்தையும் எதிர்த்தார்.

(தமிழ் நாடு எல்லைப் போராட்டமும் பெயர் மாற்றமும் – ஆசிரியர்: அ.பெரியார், பக்கம் 150)

பெரியாரை இராம.அரங்கண்ணல் இரண்டுங்கெட்டான் என்று சொன்னதில் தவறொன்றுமில்லை.

பெரியார் 11.20.1955இல் "தமிழ்நாட்டை விட்டு மலையாளிகள், ஆந்திரர்கள், மலையாளிகள், கன்னடர்கள் பிரிந்தபோன பின்பும்கூட தமிழகத்துக்கு தமிழ்நாடு என்று பெயர்கூட இருக்கக் கூடாது என்றும் பார்ப்பானும், வட நாட்டானும் சூழ்ச்சிசெய்து இப்போது அந்தப் பெயரையே மறைத்து ஒழிக்கப் பார்க்கிறார்கள்" என்று குற்றஞ்சாட்டி ஒரு அறிக்கை விட்டார்.

அதே பெரியார் தமிழ்நாடு பெயர் மாற்றம் வெற்றி பெற்றப் பிறகு 06.12.1968இல் விடுதலை தலையங்கத்தில், அண்ணாவின் முயற்சியை பாராட்டி விட்டு கூறுகிறார், "தமிழ் மக்களுக்கு இந்தப் பெயர் மாற்றத்தினால் என்ன பயன்? இது எப்படி இருக்கிறதென்றால், நமது ஆள் எதிரியிடம் உதை வாங்காமல் தப்பித்து வந்து விட்டான்

என்பதுபோல் இருக்கிறது. ஆசாமிக்கு கண் பொட்டைதான் என்றாலும் பெயர் கண்ணப்பன் என்பதுபோல் தோன்றுகிறது . . . அண்ணாதுரை நாடு என்பதாக பெயர் மாறினாலும் தமிழர்கள் அடிமை நாட்டில் அடிமையாக வாழ்வது மாற்ற மடையுமா? ” என்கிறார்.

தமிழ்நாடு என்ற பெயருக்கு எதிராக பார்ப்பனர்களும் வடவர்களும் சூழ்ச்சி செய்தார்கள் என்று அன்றைக்கு கூறிவிட்டு, இன்றைக்கு பெயர் மாற்றத்தால் என்ன பயன் என்று கேட்பதன் மூலம் அவரும் பார்ப்பன – வடவர் சூழ்ச்சிக்கு பலியாகி விட்டாரோ என்று தான் கேட்கத் தோன்றுகிறது.

தமிழக சட்டமன்றத்தில் தமிழ்நாடு என்பதைக்கூட ஆங்கிலத்தில் எப்படி அழைக்க வேண்டும் என்பதில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

அப்போது, தமிழ்நாடு என்பதை TAMIL NAD என்றுதான் அழைக்க வேண்டும் என்று இராசாசி அறிக்கை விட்டார். அவரின் சீடர் என்று அறியப்பட்ட ம.பொ.சி. இதனை மறுத்து, “THAMIZH NADU” என்று தான் அழைக்க வேண்டும் என்று திருத்தம் கோரினார். இதனை மறுத்த அண்ணா ‘ழ’ கர உச்சரிப்பை வடக்கே உள்ளவர்கள் பிழையின்றி ஒலிக்க முடியாது என்பதால் “THAMIZH NADU” க்கு பதிலாக “TAMIL NAD” என்று அழைப்போம் என்று கூறினார்.

அதற்கு மறுமொழியாக ம.பொ.சி. அவர்கள் “TAMIL” கூட இருக்கட்டும், ‘உ’ கர உச்சரிப்பை என்னால் விட்டுக் கொடுக்க முடியாது. “NAD” என்பதை “NADU” என்று தான் அழைக்க வேண்டும் என்று கண்டிப்புடன் கூறிடவே, அண்ணாவும் இதனை மனமுவந்து ஏற்றுக் கொண்டார்.

ம.பொ.சி. அண்ணாவின் தீர்மானம் குறித்து ‘எனது போராட்டம்’ நூலில் கூறுகிறார் : “தீர்மானம் எதிர்ப்பின்றி பேரவைத் தலைவர் அறிவித்தபோது, முதல்வர் அண்ணா அவர்கள் தமிழ்நாடு என்று கூற, பேரவை உறுப்பினர்கள் அனைவரும் வாழ்க என்று உரக்க ஒலித்தனர். இப்படி, மும்முறை ஒலிக்கப்பட்டது. அப்போது என் உடம்பு சிலிர்த்தது.”

ஆம்! ஈகி சங்கரலிங்கனாரின் கனவு பலித்ததை எண்ணி சிலிர்க்காத தமிழர் எவரும் உண்டோ?

நன்றி :

1. தமிழ்நாடு எல்லைப் போராட்டமும் பெயர் மாற்றமும் – அ. பெரியார்

2. ஆட்சித் தமிழ்; ஒரு வரலாற்றுப் பார்வை – சு. வெங்கடேசன்


3. தமிழ்ப் பொழில் (இதழ்)

4. சட்டப்பேரவையில் பசும்பொன் தேவர் – ஜீவபாரதி

5. எனது போராட்டம் – ம.பொ.சிவஞானம்

6. தந்தை பெரியார் முழுமுதல் வாழ்க்கை வரலாறு – கவிஞர் கருணானந்தம்

– கட்டுரை: கதிர் நிலவன்
Tamilthesiyan.wordpress.com



தமிழர் திருநாள் உருவானது எப்படி?

தமிழர்கள் கொண்டாடும் தைப்பொங்கல் திருநாளில் தமிழ்ப் புத்தாண்டை தை முதல்நாளில் தொடங்க வேண்டுமென 'தமிழ்க்கடல்' மறைமலையடிகள் முழக்கம் எழுப்பினார்.

அது போல தைப்பொங்கல் நாளினை தமிழர் திரு நாளாக கொண்டாட முதல் முழக்கம் எழுப்பியவர் பேராசிரியர் நமச்சிவாய முதலியார் ஆவார்.

சென்னை நகரில் தமது பதிப்பகத்திற்கு பாடநூல் எழுதித் தரும் தமிழாசிரியர்களுக்கு சிறப்பு செய்திடும் வகையில் 'தமிழர் திருநாள்' பெயரில் ஒரு விழாவினை நமச்சிவாய முதலியார் நடத்தி வந்தார். அதன் பிறகு தமிழர் திருநாள் பெயரில் விழா கண்டவர்கள் அண்ணல் தங்கோவும், ம.பொ.சி.யும் ஆவார்கள். 1937ஆம் ஆண்டு அண்ணல் தங்கோ உலகத் தமிழ் மக்கள் பேரவையினை தோற்றுவித்து "உலகத் தமிழ் மக்களே ஒன்று சேருங்கள்" என்றும், "தமிழ்த்தாயை தனியரசாள வையுங்கள் " என்றும் கொள்கை முழக்கமாக வரையறுத்தார்.

அவற்றை தமிழர்களிடம் கொண்டு செல்லும் நோக்கில் அவ்வாண்டிலிருந்தே தமிழர் திருநாள் விழா , தமிழர் நிலப் பெருவிழா என்ற பெயரில் தைத்திங்கள் முதல் நாளில் தமது பேரவையின் சார்பில் விழா நடத்தினார்.

அவ்விழாவில் தமிழ்ப் பேரறிஞர்களை அழைத்து தமிழ்மொழி , தமிழின உணர்வை ஊட்டினார். தமிழறிஞர் கா.நமச்சிவாயர் வழியில் தமிழர் திருநாள் விழாவை ஒவ்வொரு ஆண்டும் தம் வாழ்நாள் இறுதிவரை மிகச் சிறப்பாக நடத்திக் காட்டிய பெருமை அண்ணல் தங்கோ அவர்களுக்கே உண்டு. ஒவ்வொரு தமிழர் திருநாள் பெருவிழாவிலும் சென்னை மாகாணத்திற்கு தமிழ் நாடு பெயர் சூட்டுதல், தைத் திங்கள் மூன்றாம் நாளில் திருவள்ளுவர் திருநாளாக அறிவித்து விடுமுறை அளித்தல், சென்னை, திருச்சி வானொலி நிலையங்களில் "ஆகாசவாணி" என்று கூறுவதை நிறுத்துதல், உலகப்பொதுமறை தந்த திருவள்ளுவர் திருமேனியில் பூணூல் அகற்றி, சமயக்குறிகள் நீக்கி திருக்குறள் ஏடும் எழுத்தாணியும் உடைய திருவுருவப் படத்தை திறந்து வழிபடல், தெருப் பெயரிலும் ஊர்ப்பெயரிலும் தமிழர்தம் பெயரிலும் தூய தமிழ்ப் பெயர் மட்டுமே

வைத்தல் போன்ற எண்ணற்ற தமிழர் நலன் காக்கும் தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

அதேபோல் 1946இல் ம.பொ.சி. “தமிழரசு கழகம்” எனும் பெயரில் அமைப்பொன்றை தொடங்கினார். தமிழர் திருநாள் விழா கொண்டாட அறை கூவல் விடுத்ததுதான் தமிழரசு கழகத்தின் முதல் பணியாகும்.

சென்னை மட்டுமல்லாது தமிழர் வாழும் பிற பகுதிகளிலும், மாநிலம் கடந்து, நாடு கடந்து தமிழர் திருநாள் விழாவை நடத்துவதற்கு தூண்டுகோலாகவும் தமிழரசு கழகம் விளங்கியது.

இந்திய விடுதலை நெருங்கி வந்த தருணத்தில் மிகத் தீவிரமாக தெலுங்கர்கள் விசாலா ஆந்திரா (சென்னை உட்பட) கேட்டும், மலையாளிகள் ஐக்கிய கேரளம் கேட்டும் போராடி வந்தனர். அப்போது ம.பொ.சி. அவர்கள் தமிழினத்தை ஒன்றுபடுத்தி தட்டியெழுப்புவதற்காக ‘தமிழர் திருநாள்’ விழாவினை நடத்த முடிவு செய்தார். தமிழரசு கழகத்தின் சார்பில் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டார்.

அதில்,
“தைத் திங்கள் முதல் நாளைத் தமது நாட்டுத் திருநாளாக கொண்டாடுவது வழக்கம். இவ்வாண்டு அம்முதற் பெருநாள் 1947, சனவரி 14 அன்று வருவதால் இம்முறை தமிழ்நாட்டின் மூலை முடுக்கிலும் சிறப்பாக நிகழ்பெறல் வேண்டும். காரணம் அது தமிழ்நாட்டிற்கெனச் சுயநிர்ணய அறிக்கையை யை உறுதி செய்வதாகும்.
சுய நிர்ணயத்தின் வழியே தமிழ்நாட்டின் எல்லை கோலல், அரசியல் அமைப்பை வரையறுத்தல் முதலிய நிகழ்தல் வேண்டும். தமிழகத்தின் விடுதலைக்குரிய ஒரு விழாவில் கலந்து உழைக்குமாறு எல்லாக் கட்சியாரை வேண்டுகிறேன். தமிழர் திரு நாளை நடத்த தொழிலாளர், மாணாக்கர் முதலிய யாவரும் முற்படவாராக. தமிழ் இனம் எழுவதாக!”

என்று அறைகூவல் தரப்பட்டது.இந்த கூட்டறிக்கையில் திரு.வி.க., காமராசர், டி.டி.கிருஷ்ணமாச்சாரி, ப.சுப்பராயன், ப.ஜீவானந்தம், வ.ரா., கல்கி, பாரதிதாசன், தெ.பொ.மீனாட்சி சுந்தரம் . டி.கே.சி., செங்கல்வராயன் ஆகியோர் கையொப்பமிட்டனர். அப்போது

திராவிடர் கழகத் தலைவர் பெரியாருக்கும் பொதுச் செயலாளர் அண்ணாத் துரைக்கும் இந்த கூட்டறிக்கை நகல் அனுப்பபப்பட்டது.

இருவருமே பதில் தர மறுத்தனர்.
1947 சனவரி 14இல் அறிவித்த படி தமிழர் திருநாள் விழா தமிழகமெங்கும் நடத்தப்பட்டது.

சென்னை செயின்ட் மேரிஸ் மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் திரு.வி.க., தெ.பொ.மீனாட்சி சுந்தரம், ரா.பி. சேதுப்பிள்ளை, உள்ளிட்ட பலர் பங்கேற்று பேசினர்.

அக்கூட்டத்தில் தில்லி அரசின் அரசியல் நிர்ணய சபை உடனடியாக மொழிவாரி நாடுகளை பிரிக்க வேண்டும் என்றும், 'குமரி முதல் திருப்பதி' வரை உள்ள நிலப்பரப்பைக் கொண்ட புதிய தமிழகம் அமைக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதற்கும் பிறகும் தமிழரசு கழகத்தோடு ஒத்துழைக்க மறுத்த திராவிடர்கழகம் தனியாக 'திராவிடர் திருநாள்' பெயரிலே விழா கொண்டாடத் தொடங்கியது. பெரியாரிடமிருந்து தி.மு.க.வை உருவாக்கிய அண்ணாவும் கூட திராவிடர் திருநாள் என்றும், தமிழர் திருநாள் என்றும் இரண்டு விதமாகக் குழப்பத்தோடு பொங்கல் விழாவை நடத்தி வந்தார்.

ஆனால் பொங்கல் விழாவை பட்டி தொட்டியெங்கும் பரவச் செய்ததில் தி.மு.க.வுக்குப் பெரும்பங்குண்டு என்பதை மறைப்பதற்கில்லை. தற்போது வீரமணி தலைமையில் இயங்கங்கூடிய திராவிடர் கழகம் அதே பழைய முறையில் பொங்கல் விழாவை "திராவிடர் திருநாள்" என்று அறிவித்து கடந்த நான்கைந்து ஆண்டுகளாக வீம்பாக நடத்திக் கொண்டு வருகிறது. அதில் தமிழ்ப் புத்தாண்டு கொண்டாட்டமும் உள்ளடக்கம்.ஒவ்வொரு ஆண்டும் தமிழ்த் தேசிய அமைப்புகள் வீரமணியாரின் தமிழின அடையாள மறுப்புச் செயலை வன்மையாக கண்டித்தும் கூட வீரமணியார் இன்னும் திருந்திட வில்லை.

இந்த ஆண்டும் "திராவிடர் திரு நாள்" கூத்தை அரங்கேற்ற உள்ளார். சென்ற ஆண்டு சல்லிக்கட்டுக்கு ஆதரவாக இலட்சக்கணக்கான தமிழக இளைஞர்கள் கொதித்தெழுந்து " தமிழன் என்று சொல்லடா! தலை

நிமிர்ந்து நில்லடா!” என்று முழக்கமிட்டதைக் கூட வீரமணி மறந்து விட்டார் போலும்!

இவரின் திராவிடர் திருநாள் பட்டியலில் சல்லிக்கட்டுக்கு இடமில்லை என்பதையே இது காட்டுகிறது.

தமிழர்கள் கொண்டாடும் பொங்கல் விழாவை ஆந்திரர்களோ, கர்நாடகத்தினரோ, கேரளத்தினரோ, கொண்டாடாத போது “திராவிடர் திருநாள்” பெயரில் விழா எடுப்பது யாருக்காக என்று தெரிய வில்லை. நவம்பர் 1ஆம் நாள் மொழி வழி அமைந்த நாளை கர்நாடக, கேரள, ஆந்திர அரசுகளும் அங்குள்ள அரசியல் இயக்கங்களும், வெகுமக்கள் பங்கேற்போடு கொண்டாடி வருகின்றன. அன்றைய நாளில் மட்டும் வீரமணி குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருப்பார்.

திராவிட மாடல் அரசு சூலை18 க்கு தமிழ் நாடு நாள் விழாவை மடை மாற்றம் செய்த போது மனம் குளிர்ந்து போனவர் கி.வீரமணி .

தமிழரல்லாதார் நலம் காக்கும் பொருட்டு தமிழக எல்லை மீட்புப் போரில் பங்கெடுக்க மறுத்ததோடு பொங்கல் விழாவினை ‘திராவிடர் திருநாள்’ என்று அன்று முதல் இன்று வரை திரிபுவாதம் செய்திடும் திராவிட இயக்கங்களின் நயவஞ்சகப் போக்கை தமிழர்கள் இப்போதாவது உணர முற்பட வேண்டும்.

இன்று தமிழர் திரு நாள் மட்டுமல்ல, திராவிட மயக்கத்திலிருந்து தமிழர் அனைவரும் விழித்துக் கொள்ளும் நாளும் கூட!

அனைவருக்கும் இனிய பொங்கல் மற்றும் தமிழர் திருநாள் வாழ்த்துகள்!

(தகவல்: ம.பொ.சி. எழுதிய ‘எனது போராட்டம்’ நூலிலிருந்து.)

“முத்தமிழ்க் காவலர்” கி.ஆ.பெ.விசுவநாதம் நினைவு நாள் 19.12.1994

"முத்தமிழ்க் காவலர்" கி.ஆ.பெ. விசுவநாதம் நினைவு நாள் 19.12.1994

1. தமிழ் என்பது ஒரு நல்ல தமிழ்ச் சொல். திராவிடம் என்பது அழுத்தமான வடமொழிச் சொல்

2. திராவிடம் என்ற சொல்லே திரிந்து "தமிழ்" என்று ஆயிற்று என்பது தமிழ் பற்றாளர் சிலரது கூற்று. இது அவரவர் மொழிப்பற்றை காட்டுமேயன்றி உண்மையைக் காட்டாது-

3. பழைய சங்க காலத்திய தமிழ் நூல்கள் அனைத்திலும் "திராவிட" என்ற சொல் ஒன்று கூட இல்லை.

4. சங்க காலத்திற்குப் பின்னும், 700 ஆண்டுகளுக்கு முன்னும் தோன்றிய இன்றும் இருக்கும் எந்த நூலிலும் திராவிடம் என்ற சொல் இல்லை.

5. 650 ஆண்டுகளுக்குப் பிறப்பட்ட வரலாற்று காலத்தில் தான் வரலாறு எழுதிய ஆங்கிலேயரும், ஆங்கிலேயரைப் பின்பற்றி ஆரியரும் தமிழரை தமிழ் நாட்டை தமிழ்மொழியை மட்டுமல்லாமல் தமிழ் இனத்தையும், தமிழ் இனத்தின் மொழிகளையும் சேர்த்து "திராவிடம் " எனக் குறிப்பிட்டு இருக்கின்றனர்.

6. தமிழருக்கும், தமிழ் இனத்தாருக்கும் திராவிடர் எனப் பெயரிட்டு வரலாறு எழுதிய ஆங்கிலேயருக்கு அறிவித்தவர்கள் அக்காலத்தில் நன்கு கற்றறிந்த ஆரியர்களே!

7. "தமிழ்" என்ற தமிழ்ச் சொல்லிற்கு தம்மிடத்தில் "ழ்" ஐ உடையது. (தம்+ழ்) என்பது பொருள். "திராவிடம்" என்ற வடசொல்லிற்கு குறுகிய விடம் என்றும் திராவிடர் என்ற சொல்லிற்கு குறுகியவர்-அல்லது குறுகிய புத்தியுள்ளவர் என்றும் பொருள்.(திராவி- அற்பம், குறுகல்)

8. தமிழ்நாடு என்பது தமிழ்நாட்டை மட்டுமே குறிக்கும் – திராவிட நாடு என்பது ஆந்திரா, மலையாளம், கன்னடம், துளுவ நாடுகளையும் சேர்த்துக் குறிக்கும்.

9. தமிழ்நாடு என்று ஒரு தனி நாடும்; தமிழ் மொழி என்று ஒரு தனி மொழியும் உண்டு. திராவிட நாடு என்று ஒரு தனி நாடும், திராவிட மொழி என்று ஒரு தனி மொழியும் இல்லை.

10. தமிழ்நாடு , தமிழ் மொழி எனக் கூறலாம்- ஆனால் திராவிட நாடு, திராவிட மொழி எனக் கூற இயலாது. திராவிட நாடுகள், திராவிட மொழிகள் என்றே கூறியாக வேண்டும்.

11. தமிழ்நாட்டு எல்லை வரையறுத்துக் கூறப்பட்டிருக்கிற ஒன்று. திராவிட நாட்டின் எல்லை இதுவரை எவராலும் வரையறுத்து கூறப்படாத ஒன்று. ஒரு நாள் இந்திய மலை வரையில், மற்றொரு நாள் அசாம் வரையில், வேறொரு நாள் இந்தியா முழுவதுவமே "திராவிட நாடு" கூறப்பட்டதும் உண்டு..

12. தமிழ் என்றால் திராவிடம் தான், திராவிடம் என்றாலும் தமிழ் தான், தமிழர் என்றால் திராவிடர் தான், திராவிடர் என்றாலும் தமிழர் தான், தமிழ்நாடு என்றால் திராவிடநாடு தான். திராவிட நாடு என்றாலும் தமிழ்நாடு தான் "அந்தக் கருத்தில்தான் அப்படிச் சொல்லப்பட்டு வருகிறது" என்பதில் புரட்டு இருக்குமே தவிர உண்மை இருக்காது.

13. தமிழர் என்று எழுதி (திராவிடர்) என்று கூட்டுக்குள் போடுவதும், தமிழ்நாடு என்று எழுதி (திராவிட நாடு) என்று கூட்டுக்குள் போடுவதும், பிறகு திராவிடர் (தமிழர்) என்று எழுதி கூட்டுக்குள் போடுவதும் , திராவிட நாடு (தமிழ் நாடு) என்று எழுதி கூட்டுக்குள் போடுவதும் தவறான எழுத்தாகுமேயன்றி நேர்மையான எழுத்தாகாது.

14. தமிழ்நாட்டைத் தாய்நாடாகக் கொண்டு, தமிழ்மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு, தமிழ்ப் பண்பை தாய்ப்பண்பாகக் கொண்டு வாழ்பவர் அனைவரும் தமிழரே என்பது ஜாதி பேதமற்று உறுதி செய்யப்பட்டு விட்டது. ஆனால் திராவிடர் யார்? என்பது இன்னும் உறுதி செய்யப்படாமலே இருந்து வருகிறது. ஒரு நாள் மகாராஷ்டிரரும் திராவிடர் என்றும், மற்றொரு நாள் வங்காளிகளும் திராவிடர் என்றும், வேறொரு நாள் "ஆரியர் தவிர அனைவரும் திராவிடரே" என்றும் சொல்லப்பட்டு வந்திருக்கிறது.

15. தமிழ்மொழி ஒன்று மட்டுமே தனித்து நிற்க எழுதப்பேச, இயங்க ஆற்றலுடையது. இத்தகைய ஆற்றல் தமிழ் ஒழிந்த திராவிட மொழிகளில் எதற்கும் இன்று இல்லை.

16. திராவிட மொழிகள் பலவும், வடமொழியோடு சேரச் சேர பெருமையடைகின்றன! தமிழ்மொழி ஒன்று மட்டுமே வடமொழியிலிருந்து விலக, விலக பெருமையடைகிறது!

17. தமிழ்நாடு ஒன்று மட்டுமே பிரிந்து வாழும் தகுதியையும் சிறப்பையும் பிற அமைப்பையும் உடையது. திராவிட நாடுகளில் எதுவும் இத்தகைய நிலையில் இன்று இல்லை.

18. தமிழ் மக்களுக்கு மட்டுமே வட நாட்டிலிருந்து பிரிந்து தனித்து வாழ வேண்டும் என்ற உணர்ச்சி இருந்து வருகிறது. இத்தகைய உணர்ச்சியில் சிறிதளவாவது பிற திராவிட மக்களிற் பலரிடத்திலும் காண முடியவில்லை.

19. "தமிழ்நாடு தமிழருக்கே" என்பது தமிழ்மக்களின் பிறப்புரிமையாக இருக்கும். "திராவிடநாடு திராவிடருக்கே" என்பதுவேண்டாதவர்களுக்கும், விரும்பாதவர்களுக்கும் சேர்ந்து கூப்பாடு போடுவதாக இருக்கும்.

20. திராவிட நாட்டினர்களிற் பலர் தமிழ் மக்களில் எவரையும் அறிவாளி என்று ஒப்பியதுமில்லை; ஒப்புவதுமில்லை. தமிழர்களில் எவரையும் தங்களின் தலைவனாக ஏற்றுக்கொண்டதுமில்லை. ஏற்றுக்கொள்ளப்போவதுமில்லை.

21. திராவிட மக்களிற் பலரும் தமிழர்களிடமிருந்து பிரிந்து வாழவே ஆசைப்படுகிறார்கள். குறை கூறுகிறார்கள். வைகிறார்கள். மனிதனை மனிதனாகக்கூட மதிப்பதில்லை. இக்கூற்றை மெய்ப்பிக்க திராவிடத்தின் தலைவர் என்று தன்னை சொல்லிக் கொள்ளுகிறவர் வீர உணர்ச்சியுள்ள தமிழ்நாட்டு இளைஞர்களே "அதுகள்; இதுகள்" என அஃறிணைப்படுத்தி வைதும் செல்லுமிடமெல்லாம் தமிழ்நாட்டுத் தலைவர்களை, அறிஞர்களை இழிவுபடுத்தி வைவதுமே போதுமான சான்றாக இருந்து வருகிறது. இதனைப் பார்க்கும்போது திராவிடம் என்பதே தமிழ்ப் பகைவர் பேச்சாக இருக்குமோ என்ற ஐயம் உண்டாகிறது.

22. 10 ஆண்டுகளாக திராவிடப் பேச்சு, பிரச்சாரம், பத்திரிகை, கிளை அமைப்பு, பண வசூல், சுற்றுப் பிராயணம், கமிட்டி, தொண்டர்கள், உண்டியல்கள், ஆகிய 9-உம் தமிழ்நாட்டில் மட்டுமே நடைபெற்று வருவதால் அதை தமிழ்நாட்டுக் கழகம் எனச் சொன்னாலும் சொல்லலாமே ஒழிய திராவிட நாட்டுக் கழகம் எனச் சொல்லுவது உண்மைக்கு மாறானதாகும்.

23. தமிழ் நாட்டிற்குள்ளாக திராவிடம் பேசுவது, தமிழ் இளைஞர்களின் தமிழ்ப்பற்றை, தமிழ் நாட்டுப் பற்றை, வீர உணர்ச்சியை வேண்டுமென்றே வீணாக்கி, பாழ்படுத்துவதாக இருந்து வரும்.

24. காலம் செல்லச் செல்ல திராவிட நாடுகளுக்கும் சென்று, அங்கும் பிரச்சாரம் செய்து அவர்களுக்கும் உணர்ச்சி ஊட்டி விடலாம் என்று எவரேனும் கூறுவதானால், அவ்வாறு கூறுகிற அவர் தமது ஆற்றலைத் தவறாகக் கருதுகிறவர் என முடிவு கட்டி விட வேண்டும்.

25. திராவிடர் எவரும் விரும்பாத திராவிட நாட்டை, திராவிடர் எவரும் உறுப்பினரில்லாத திராவிடர் கழகத்தை, திராவிடர் எவரும் ஒப்புக் கொள்ளாத திராவிடத் தலைவர், அரசியல் கழகமல்லாத ஒரு கழகத்தைக் கொண்டு “அடைந்தே தீருவேன் திராவிட நாடு” என்றால் அது இல்லாத ஊருக்கு, போகாத பாதையை, தெரியாத மனிதனிடம், புரியாத விதமாகப் பேசிக் கொண்டிருப்பது போலவே இருக்கும்.

26. அப்படியே பிரிவதாக இருந்தாலும் திராவிடக் கூட்டாட்சியில் தமிழ் மொழி அரசியல் மொழியாக இருக்குமா? அதனை திராவிட நாட்டார்கள் அனைவரும் ஒப்புவரா? என்பதையும் ஒப்பிட்டுப் பார்ப்பது நலமாகும்.

27. அப்படியே ஒப்பினாலும் கூட்டாட்சியில் உறுப்பினராக இருக்கும் வடமொழிப்பற்றும், வடசார்பும் உள்ள ஆந்திரர், மலையாளி, கன்னடியர், துளுவர் ஆகிய நால்வருக்கும் எதிராக தமிழ் மொழிப்பற்றும் சார்பும் உள்ள ஒருவன் இருந்து தமிழ், தமிழர், தமிழ்நாட்டின் நலன்களை வளர்க்க முடியுமா? முடியாவிட்டாலும் பாதுகாக்கவாவது முடியுமா? என்பதும் எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்றாகும்-

28. அவ்விதமே முடிந்தாலும் அந்தக் கூட்டாட்சிக்கு உறுப்பினனாக தமிழ் நாட்டின் தலைவனைத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டாமா? தேர்ந்தெடுக்க தமிழ்நாடு முழுவதும் அடங்கிய ஓர் அமைப்பு வேண்டாமா? அத்தகைய அமைப்பு திராவிடத் தலைவருக்கு போட்டியாகவும், அமைப்பை அமைக்கத் தொண்டு செய்பவர்கள் பித்தலாட்டக்காரர்களாக, அயோக்கியர்களாகத் தோன்றவும் காரணம் என்ன? என்பவைகள் அரசியல் அறிஞர்களால் ஆராய வேண்டியவைகளாகும்.

29. தமிழ் வாழ்க என்று கூறி தமிழ்நாடு தமிழருக்கே என அலறி தமிழர் கழகத்தைத் தோற்றுவித்துத் தமிழர் மாநாடுகளைக் கூட்டி, தமிழ்க்கொடியை உயர்த்தி, இந்தி எதிர்ப்பை நடத்தி, பண முடிப்புகளைப் பெற்றுக் கொண்ட பிறகு, அவைகளை அடியோடு ஒழித்துவிட்ட திராவிடம் வளர்க எனக் கூறி, திராவிட நாடு

திராவிடருக்கே என அலறி திராவிட கழகத்தைத் தோற்றுவித்து, திராவிட மாநாடுகளை நடத்தி, திராவிடக் கொடிகளை உயர்த்தி திராவிடர்க்கு போராட வேண்டிய அவசியமும், அவசரமும் என்ன? என்பதற்கு திராவிடம் இதுவரை பதிற்கூறவேயில்லை. தமிழ் வேறு, திராவிடம் வேறு என்பதற்கும், இரண்டும் ஒன்றல்ல என்பதற்கும் இதுவும் போதுமான சான்றாகும்.

30. தமிழ்ப் பெரியார் என்றும், தமிழ்த் தாத்தா என்றும், தமிழ்நாட்டுத் தலைவர் என்றும், தமிழ்நாட்டு தனிப்பெருந்தலைவர் என்றும், தமிழ் மக்கள் அனைவரும் இந்தி எதிர்ப்புக் காலத்தில் அழைத்தும், சொல்லியும் வரலாற்றில் எழுதியும் கூட அவர் தன்னை கன்னடியர் என்று நினைக்கிற நினைப்பும், முனைப்புமே இம்மாற்றத்திற்குத் காரணம் என்பதை அவர் இன்றுவரை மறுக்க முன்வராததால், அது உறுதி செய்யப்பட வேண்டியதேயாகும்.

இதுகாறுங் கூறியவைகளைக் கண்டு

தமிழ் எது? திராவிடம் எது?
தமிழர் யார்? திராவிடர் யார்?
தமிழ்நாடு எது? திராவிட நாடு எது?
தமிழ் மக்களுக்கு வேண்டுவது எது?


என்ற இவையும், இவை போன்ற பிறவும் ஒருவாறு விளங்கியிருக்கும் என எண்ணி உண்மையை விளக்க இவை போதும் என நம்பி இத்தோடு நிறுத்துகிறோம்.

நன்றி:”,தமிழர் நாடு” இதழ், 1 மார்கழி 1980 (16.12.1949)
பேரா.கோ.வீரமணி தொகுத்த “முத்தமிழ்க் காவலர்”
கி.ஆ.பெ.விசுவநாதம் நூலிருந்து.

– கதிர் நிலவன்

ஆசிரியர்:
நாவலர் எஸ். சோமசுந்தர பாரதியார்
https://ta.wikisource.org/wiki/%E0%AE%86%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B0%E0%AF%8D:%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%B5%E0%A

E%B2%E0%AE%B0%E0%AF%8D_%E0%AE%8E%E0%AE%B8%E0%AF%8D._%E0%AE%9A%E0%AF%8B%E0%AE%AE%E0%AE%9A%E0%AF%81%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B0_%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D



ச. சோமசுந்தர பாரதியார் (சூலை 27, 1879 - 1959, திசம்பர் 14; எட்டயபுரம், தமிழ்நாடு) என்னும் நாவலர் சோமசுந்தர பாரதியார் சிறந்த தமிழறிஞர் ஆவார். இவர் பல பாடல்களையும் நூல்களையும் எழுதியதோடு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னின்று செயலாற்றியவர். மதுரை மாவட்டத்தின் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தின் தலைவராகவும் செயற்பட்டவர். இவரது நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமை ஆக்கபட்டட்டன.

நாவலர் சோமசுந்தர பாரதியார்

கதிர் நிலவன்

https://www.keetru.com/index.php/2009-10-07-10-47-41/thamizhar-kannottam-dec16-2014/27905-2015-02-21-03-30-23

1937ஆம் ஆண்டு காங்கிரசுக் கட்சி முதன் முறையாகத் தேர்தலில் போட்டியிட்டு பல்வேறு மாகாணங்களில் வெற்றி பெற்றது. அதில் சென்னை மாகாணமும் ஒன்று. அப்போதைய சென்னை மாகாண முதல்வர் இராசாசி வேறு எந்த மாகாண முதல்வரும் செய்யத் துணியாத காரியமொன்றைச் செய்தார். தொடக்கப் பள்ளிகளில் இனிமேல் இந்தி கட்டாயப் பாடமாக புகுத்தப்படும் என்று அறிவித்தார். அப்போது, இந்தித்திணிப்பிற்கு எதிராக முதன்முறை யாகத் தமிழறிஞர்கள் ஒன்று கூடிப் போர்க்குரல் எழுப்பினர்.

அக்காலத்தில் முப்பத்தைந்து ஆண்டு காலமாகக் காங்கிரசுக் கட்சிக்குத் தம்மை ஒப்படைத்து இந்திய விடுதலைக்குப் போராடி வந்த தமிழறிஞர் ஒருவர் அக்கட்சியிலிருந்து வெளியேறி, தமிழறிஞர்களோடு இணைந்து போராடினார். அவர் வேறு யாருமல்லர்; நாவலர் என்றழைக்கப்படும் சோமசுந்தர பாரதியார் ஆவார். அவரின் வாழ்க்கை வரலாற்றை இனி காண் போம்.

எட்டையபுரத்து அரசரின் நன்மதிப்பைப் பெற்றுத் திகழ்ந்தவர் சுப்பிரமணிய நாயக்கர். இவர் சென்னையிலிருந்து

எட்டையபுரத்திற்குக் குடிபெயர்ந்து வந்ததால் "எட்டப்பப் பிள்ளை" என்று அழைக்கப்பட்டார். எட்டப்பப்பிள்ளை - முத்தம்மாள் இணையருக்கு மகனாக 27.07.1879 இல் பிறந்தவர்தாம் சோமசுந்தரம்.

எட்டையபுரம் அரண்மனையில் பணியாற்றி வந்த சின்னச்சாமி ஐயரின் மகன் சுப்பிரமணியனும், அரண்மனையில் வளர்ந்து வந்த சோமசுந்தரமும் சிறு வயது முதலே நல்ல நண்பர்கள். தமிழ் மீதான ஆர்வமே இருவரையும் ஒன்று சேர்த்தது. இருவரும் இணைப் பறவையாய் பரந்த அரண்மனையில் பாடிப் பறந்து வலம் வந்தனர்.

எட்டையபுரம் அரண்மனைக்கு வருகை தரும் தமிழ்ப் புலவர்களின் பாடல் கேட்டு பா புனையும் ஆற்றலை இருவரும் பெற்றிருந்தனர். ஒரு முறை யாழ்ப்பாணத்திலிருந்து புலவர் ஒருவர் அரண்மனைக்கு வந்தார். அவர் இருவரிடமும் சென்று ஈற்றடி கூறி, பாடலொன்றை இயற்றித் தருமாறு வேண்டினார். இருவரும் எழுதுகோல் பிடித்து உடனடியாக அந்த ஈற்றடிக்கு பாடல் தந்தனர். அதனைப் படித்துப் பார்த்த யாழ்ப்பாணப் புலவர் மெய்சிலிர்த்து "இதுவன்றோ, அருமைப்பாடல்." எனக்கூறி இருவ ருக்கும் "பாரதி" பட்டம் வழங்கிச் சிறப்பித்தார்.

அன்று முதல் சோமசுந்தரம் "சோமசுந்தர பாரதி" என்றும், சுப்பிர மணியன் "சுப்பிரமணிய பாரதி" என்றும் அழைக்கப்பட்டனர்.

1905ஆம் ஆண்டு சென்னையில் சட்டத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற சோமசுந்தர பாரதியார் தூத்துக்குடிக்குச் சென்று வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார். அப்போது வ.உ.சி.-யோடு நெருக்கம் கொண்டு பழகியதன் மூலம் இந்திய விடுதலை யின் மீது தீராப் பற்றுக் கொண்டார்.

வ.உ.சி. தோற்றுவித்த கப்பல் நிறுவனத் திற்குப் பொறுப்பேற்று செயல்படவும் பாரதியார் துணிந் தார். அதன் காரணமாகவே, வ.உ.சி. "இரண்டு சரக்குக் கப்பலோடு சேர்த்து மூன்றாவதாக ஒரு தமிழ்க் கப்பலும் என்னிடமுண்டே" என்று விளையாட்டாக மற்றவரிடம் பேசு வதுண்டு - அதாவது "எஸ்.எஸ். பாரதி" என்பதை "தமிழ்க் கப்பல்" என்று வ.உ.சி. விளித்துக் கூறுவது வழக்கம்.

வ.உ.சி.யின் கப்பல் நிறுவ னத்தை விட்டு நீங்கினால் பெரும் பதவி கிடைக்குமென்று ஆசை வார்த்தைகளை ஆங்கிலேயர் கூறி

வந்தனர். அவற்றுக்கு சோம சுந்தர பாரதியார் மயங்கிட மறுத்தார். மாறாக, ஆங்கிலேயர் வ.உ.சி., சுப்பிர மணிய சிவா ஆகியோர் மீது தொடுத்த இராசதுரோக வழக்கு களை எதிர் கொண்டு வாதாடி னார்.

காந்தியடிகள் சென்னைக்கு வந்த போது அவரை சோமசுந்தர பாரதியார் தூத்துக்குடிக்கு அழைத் துச் சென்று பொதுக் கூட்டங்களில் உரையாற்றும்படி செய்தார். காங் கிரசுப் பேரியக்கத்தில் தான் மட்டு மல்லாது, தம் புதல்வன் இலட்சு மிரதன் பாரதி, புதல்வி இலக்குமி பாரதி, மருமகன் கிருஷ்ணசாமி பாரதி ஆகியோரை ஈடுபடுத்தி சேவையாற்றும் படி கேட்டுக் கொண்டார்.

1933ஆம் ஆண்டு அண்ணா மலை அரசரின் வேண்டு கோளுக் கிணங்க, வழக்கறிஞர் தொழிலைக் கைவிட்டு அண்ணாமலைப் பல் கலைக் கழகத்தின் தமிழ்த்து றைப் பேராசிரியராக பாரதியார் பொறுப் பேற்றார். அங்கு தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக தமிழ்ப் பணியாற்றி வந்த காலத்தில்தான் 1937ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு ‘தீ’ கொழுந்து விட்டெரிந்தது.

10.08.1937இல் இராமகிருஷ்ண மடம் மாணவர் இல்ல விழாவில் உரையாற்றிய முதல்வர் இராசாசி “இந்தியில் பாட நூல்கள் விரைவில் எழுதப்படும்” என்று அறிவிப் பொன்றை வெளியிட்டார்.

27.08.1937இல் கரந்தை தமிழ்ச் சங்கம் சார்பில் த.வே. உமா மகேசு வரனாரும், 29.08.1937இல் திருநெல் வேலித் தமிழ்ப் பாதுகாப்பு சங்கத் தின் சார்பில் மா.வே. நெல்லையப் பப் பிள்ளையும் இராசாசியின் இந்தித் திணிப்பைக் கண்டித்து முதல் குரல் எழுப்பினர்.

அதன் பிறகு இந்தித் திணிப் பிற்கு எதிரான குரலை சென்னை யில் தொடங்கி வைத்த பெருமை சோமசுந்தர பாரதியாரையே சாரும். 05.09.1937இல் சென்னை சௌந் தரிய மண்டபத்தில் பாரதியார் தலைமையில் நடைபெற்ற கூட்டத் திற்கு திருவாளர்கள் இரா.பி. சேதுப்பிள்ளை, சுவாமி சகஜானந் தம், ‘ஜஸ்டிஸ்’ இதழாசிரியர் டி.ஏ.வி. நாதன், உமா மகேசுவரனார், சி.என். அண்ணாதுரை, பண்டிதை நாராய ணியம்மாள் உள்ளிட்ட எண்ணற்ற தமிழ்ப் பெருமக்கள் வந்திருந்தனர்.

அக்கூட்டத்தின் தலைவராகிய பாரதியார் பின்வருமாறு உரை நிகழ்த்தினார். “இந்தி மொழி, இலக் கண இலக்கியச் சிறப்பில்லாத

வெறு மொழி, அம்மொழி பயிலுவ தால் தமிழ் மொழியும், தமிழர் நாகரிகமும் கெட்டுவிடும். தமிழ்ப் பள்ளிக் கூடங்களில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவதைத் தமிழ் மக்கள் முழு வன்மையோடு கண் டித்து ஒழிக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் உடனே தீவிரமாய்ச் செய்திடல் வேண்டும். அதுவே தமிழர் வீரமுடையவர் என்பதைக் காட்டும். அவ் வெதிர்ப் பினால் ஏதாவது கேடு வருமா னால் அதனை பெறத் தாம் முன்னணியில் இருப்பேன்." என்று இரத்தம் துடிதுடிக்கப் பேசினார்.

இந்தக் கூட்டத்தின் அடுத்த படிநிலையாக 04.10.1937இல் சென்னை கோகலே மண்டபத்தில் மாபெருங் கூட்டம் நடைபெற்றது. இதில் இரண்டாயிரத்திற்கும் மேற் பட்டோர் பங்கேற்றனர். தமிழ்க் கடல் மறைமலையடிகள் தலைமை தாங்கிய இக்கூட்டத்தில் பாரதியா ரின் உரை கோடை இடியாய் அமைந்தது. காங்கிரசுத் தலைவர் களுக்குக் கொடுத்த வாக்குறுதி என்பதால் இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவதா? என்றும், முதல் மந்திரியாருக்கு தமிழ் மக்களுக்கு வாக்குறுதியளிக்க யாதொரு உரிமை யும் இல்லையென்றும் கடுஞ்சினங் கொண்டு பேசினார். இதில் பரலி சு. நெல்லையப்பப் பிள்ளை, வச்சிர வேல் முதலியார், கே.எம். பால சுப்பிரமணியம், சி.என். அண்ணா துரை, முத்தையா முதலியார் ஆகிய வர்கள் பங்கேற்று உரை நிகழ்த்தி னர். இக்கூட்டத்தில் சட்ட சபையி லும், நீதிமன்றங்களிலும், கல்லூரி களிலும், அரசியல் அலுவல் கூடங்களிலும், தாய்மொழியாகிய தமிழ் மொழியிலேயே எல்லாக் காரி யங்களும் நடைபெறுதல் வேண்டு மென்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

சென்னையில் நடைபெற்ற தொடர் இந்தி எதிர்ப்பு மாநாடுகள் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாக மாவட்டந்தோறும் இந்தி எதிர்ப்பு மாநாடுகள் முளைவிடத் தொடங் கின. பல்வேறு ஊர்களுக்குப் பாரதி யாரும் பயணம் மேற் கொண்டு வீர உரையாற்றி மக்களை எழுச்சி கொள்ளும்படி செய்தார்.

26.12.1937இல் பாரதியார் தலைமையில் திருச்சியில் நடை பெற்ற சென்னை மாகாண மூன்றா வது தமிழர் மாநாடு இந்தி எதிர்ப் புப் போரை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் சென்றது. 2500க்கும் மேற் பட்ட தமிழர்கள் பங்கேற்ற மாபெரும் பேரணி முதன்முறையாக நடைபெற்றது. இந்த மாநாட்டில் தான் பெரியாரும் முதல் முறையா கப் பங்கு கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தனை மாநாடுகள் கூட்டி யும், தீர்மானங்கள் நிறைவேற்றியும் கட்டாய இந்திப் பாட ஆணை யைத் திரும்பப் பெற முடியாது எனும் ஆணவத்தில் இராசாசி உறுதியாய் இருந்தார். மேலும், கட்டாய இந்திப் பாட ஆணை 21.04.1938இல் நடைமுறைக்கு வரும் என்று அறிவிப்பும் செய்தார்.

இந்நிலையிலே, திருச்சியில் 28.05.1938இல் கூடிய மந்திராலோ சனைக் கூட்டத்தில் பாரதியார் "சத்தியாக்கிரகம் - அதில் வெற்றி கிடைக்காவிடில் சட்ட மறுப்புத் தொடங்க வேண்டியதைத் தவிர வேறில்லையென்று" போர் முரசம் கொட்டி முழங்கினார். உடனடியாக இந்தி எதிர்ப்பு வாரியம் உருவாக் கப்பட்டது. அதன் தலைவராகப் பாரதியார் அவர்களும் செயலாள ராக கி.ஆ.பெ.விசுவநாதம் அவர் களும், உறுப்பினர்களாக ஈ.வெ.ரா., உமா மகேசுவரனார், ஊ.பு.சௌந் தர பாண்டியன், கே.எம். பால சுப்பிரமணியம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். பாரதியார் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு, நாள் தோறும் மறியல், நாள் தோறும் சிறை என்ற நிலைக்குப் போராட்டம் வளர்ந்தது. தொடர் போராட்டங்கள் இராசாசி அரசை கலங்கடிக்கச் செய்தது. இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத் தில் பெரியார் ஈ.வெ.ரா. தலைமை யும் இருந்ததால் ஏராளமான தொண்டர்கள் போராடிச் சிறை சென்றனர். பெரியார் ஈ.வெ.ரா தளைப்படுத்தப்பட்டு பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்தி எதிர்ப்புப் போரின் முடிவில் இரண்டு கோரிக்கைகள் தமிழர்களிடத்தில் வலுப்பெற்று நின்றன 1) மொழி வழித் தமிழ் மாகாணம், 2) தமிழ்நாடு தமிழ ருக்கே. இவ்விரண்டு கோரிக்கை உருவாக்கத்திலும் பாரதியாரின் பங்கு அளப்பரியது. தன் வாழ் நாளின் இறுதிவரை இக்கோரிக்கை களின் மீது உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார்.

பாரதியார் தமிழ்மொழி, தமிழின அடையாளத்தை ஒரு போதும் விட்டுத்தர மறுத்தார். பெரியார் உருவாக்கிய ஆரியத்திற்கு எதிர்வகை குறியீட்டுச் சொல் லாகிய திராவிடத்தை நாவலர் பாரதியார் ஒப்புக் கொள்ளவில்லை. ஆரியர் ஜ் தமிழர் என்பதே அவரது கொள்கை நிலைப்பாடாகும்.

1937ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போரில் நாவலர் பாரதி யார் 'தமிழர் கழகம்' எனும் அமைப்பை நிறுவினார். தமிழ் மொழி

ஆக்கத்திற்கும், இந்தி எதிர்ப்புக்கும், தமிழர் முன்னேற்றத் திற்கும், வெவ்வேறு பெயர்களில் அமைக்கப் பெற்ற இயக்கத்தினர் களெல்லாம் 'தமிழர் கழகக்' கிளை களை அங்கங்கே அமைக்க வேண்டு மென்று பாரதியார் பேரழைப்புக் கொடுத்தார். பிறகு 'தமிழர் கழகம்' எனும் இதே பெயரில் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் அமைப்பைக் கட்டிய போதும் அதன் தலைவ ராகப் பாரதியார் பொறுப்பு வகித் தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1942ஆம் ஆண்டு பெரியாரின் திசைமாறிப் போன 'திராவிட நாடு திராவிடருக்கே' முழக்கம் காதைப் பிளந்து வந்த நிலையில், சி.பா. ஆதித்தனார் 'தமிழ் ராச்சிய கட்சி'யை உருவாக்கினார். அப் போது அதனை மனமுவந்து தொடங்கி வைத்தவரும் பாரதியார் என்பது நினைவு கூரத்தக்கது.

நீதிக்கட்சியில் பெரியார், அண்ணா இருந்த போதும், தி.மு.க.வை அண்ணா உருவாக்கிய போதும் 'திராவிடம்' குறித்தத் தமது மறுப்புக் கருத்தை பாரதியார் வெளிப்படுத்திய தருணங்கள் பல உண்டு.

14.03.1943இல் சேலத்தில் நடந்த "கம்பராமாயண எரிப்புப் போர்" உரையாடலின் இறுதிப்பகுதியில் பாரதியார் கூறுகிறார் "தமிழன் தன்னைத் தமிழனென்று கூறிக் கொள்ளவும் வெட்கப்பட்டுத் 'திராவிடன், திராவிடன்' என்று தோள் குலுக்குவதா? திராவிடன் என்ற பெயர் சங்க நூலிலே ஏது? 'சுயமரியாதை, சுயமரியாதை' என்று ஆரிய மொழி பேசினார்கள். நான் சொல்லிச் சொல்லி இப்போதுதான் 'தன்மானம்' என்று தமிழாகப் பேசுகிறார்கள்" என்று இடித் துரைத்தார்.

1950ஆம் ஆண்டு மே மாதம் 27, 28 நாட்களில் கோவையில் தி.மு.க. சார்பில் முத்தமிழ் வளர்ச்சி மாநாடு நடைபெற்றது. அதில் மாநாட்டுத் திறப்பாளராக கலந்து கொண்ட பாரதியார் அவர்கள் மீண்டுமொரு முறை திராவிடத்தின் மீது குட்டு வைத்துப் பேசினார். அது வருமாறு "இந்நாளில் பலர் திராவிடர், திராவிடர் என்றே சொல்லி வருகிறார்கள். தமிழ், தமிழர் என்று சொல்ல உங்கள் வாய் ஏன் கூசுகிறது? தமிழ், தமிழர் என்று சொல்ல வெட்கப்படுகி றவன் தமிழனாயிருக்க முடியுமா? அவன் இரத்தத்திலே எப்படி தமிழ் இரத்தம் ஓடும்? இனியாவது தமிழ், தமிழர் என்று சொல்லுங்கள். தமிழருக்குத் தமிழரே பகைவர்" என்றார்.

பாரதியாருக்கும் ஒரு படி மேலே சென்று, அம்மாநாட்டிலே தூய தமிழ்க் காவலர் கு.மு.அண் ணல் தங்கோ "திராவிடம் என்ற சொல்லைக் கேட்டாலே காதில் நாராசம் பாய்ச்சியது போல இருக்கிறது" என்று சொன்னாரே பார்க்கலாம். அண்ணாவோ பதை பதைத்துப் போனார். முத்தமிழ் மாநாடு திராவிடத்திற்கு விளக்கம் சொல்லும் மாநாடாக மாறிப் போனது.

1953ஆம் ஆண்டு அண்ணல் தங்கோ தமிழக எல்லைத் தற்காப்பு மாநாட்டை நடத்தினார். கருணா நிதி, பாரதிதாசன், கி.ஆ.பெ. விசுவநாதம், கா.அப்பாதுரையார், டார்பிடோ சனார்த்தனம், திருக் குறள் முனுசாமி ஆகியோர் பங்கு கொண்ட மாநாட்டில் அதன் தலை வராகிய பாரதியார் "நாம் தமிழர்! நமது இனம் தமிழினம்! நமது நாடு தமிழ்நாடு! தமிழ்நாடு தான் நமது குறிக்கோள்! மொழிவழியாகப் பிரிந்துவிட்ட போது திராவிடம் என்பதில் பொருள் இல்லை! திராவிடம் என்பது தமிழ்ச் சொல்லே அன்று!" என்று பேசிய போது கூட்டத்தில் சலசலப்பு ஏற் பட்டது. அதற்குக் காரணம் கூட்டத்திலே பங்கு பெற்றவர்கள் கி.ஆ.பெ.விசுவநாதம் தவிர, மற்ற ஏனையோர் திராவிடச் சார்பா ளர்கள் என்பதே உண்மையாகும்.

திராவிட இயக்கத்தவரின் ஆரிய எதிர்ப்பில் உடன்பாடு கொண்ட வராக இருந்த போதிலும், அந்த ஆரிய எதிர்ப்பையும் கூட, தாம் சுய மரியாதை இயக்கத்தால் கற்றுக் கொள்ளவில்லை என்பதை தெளிவு படுத்தி கூறவும் பாரதியார் துணிந் தார். அது வருமாறு "ஆரியருக்கு அடிமைப்படாத எண்ணம் எனக்கு 40 ஆண்டுகளுக்கு முன்பே ஏற் பட்டது. சுயமரியாதை இயக்கம் தோன்றுவதற்கு முன்பே இருந்தது. என்னுடைய 14 வயதில் திருமணம் நடைபெற்றது. என்னுடைய சிவ நெறி வேறு; இன்று சைவப் பண்டி தர் கூறும் சைவமல்ல. உண்மையே எனக்குச் சிவம். எனக்குத் திருமணம் பார்ப்பனரை வைத்து செய்வதாகக் கூறினார்கள். சைவ ஆகமங்களின் படி பார்ப்பனர்கள் சண்டாளர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.

"கோயில்களிலே அவர்கள் துவஜஸ்தம்பத்துக்கு (கொடி மரத் துக்கு) அப்புறம் நுழையக் கூடாது. வந்தால் தீட்டாகி விடும் என்று ஆகமம் கூறுவதால், அப்படிப்பட்ட சண்டாளர்களைக் கொண்டு நான் கல்யாணம் செய்து கொள்ள மாட் டேன் என்றேன்.. பிறகு சைவ குருக்கள் வைத்து திருமணம் நடந்தது. எனது சிறிய வயதிலேயே

எனக்கு அந்த நோக்கம் இருந்தது. சுயமரியாதை இயக்கத்தாலோ, அண்ணாதுரையாலோ அந்த நோக்கம் எனக்கு வரவில்லை. அது முதற்கொண்டு இதுவரை நான் தமிழருக்குத் தன்மானம் வர வேண்டுமென்று உழைத்து வந்திருக் கின்றேன்."

பாரதியார் தமிழ் நூல்களிலே உள்ள ஆரியத்திற்கு வலுசேர்க்கும் கருத்துகளை புறந்தள்ள வேண்டு மென்று வற்புறுத்துவார். அதே வேளையில் அவற்றில் நல்ல கருத்து கள் இருக்கும் பட்சத்தில் அவற்றை போற்றிடவும் தயங்கக் கூடாது என்பார்.

தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர் நச்சினார்க்கினியர். அறிவாகிய கடவுளுக்கு 6 முகம் உள்ளது, 12 கையுள்ளது என்று கூறுவது எப்படிப் பொய்யோ அப்படித்தான் நச்சினார்க்கினியர் உரையும். நச்சினார்க்கினியன் உமிழ்ந்த எச்சில் என்றால் அதை நக்கவா வேண்டும்? என்று சாடி னார் பாரதியார். (நச்சினார்க் கினியர் பார்ப்பனர், தொல் காப்பியத்திற்கு ஆரிய மரபு சார்ந்த சில விளக்கங்கள் தந்தவர் - கதிர் நிலவன்) அதே பாரதியார்தாம் அண்ணா கம்பரா மாயணத்தை எரிக்கும் முயற்சியில் ஈடுபட்ட போது அதை வன்மையாகக் கண்டித்தார். ஒரு சிறந்த காவியத்தை எரிப்பது நல்லதல்ல. அது தமிழ் நெறியன்று. ஆபாசக் கருத்துகளை எரிக்கச் செய்யப்படும் முயற்சிக்கு வேண்டுமானால் நான் துணை நிற்பேன். அருந்தமிழ் நூலை எரிப்பதால் ஆபாசக் கருத்தை எப்படி அழிக்க முடியும்? கம்பனைப் போல் சிறந்த கவியை கண்டதில்லை என்று கம்பனைப் போற்றிடவும் செய்தார். இன்று கம்பன் கவி நயத்தை - தமிழ் அமுதை கலைஞர் கருணாநிதி உள்ளிட்ட திராவிட இயக்க அறிஞர்கள் பலரும் போற்றுவதைப் பார்க்கிறோம்.

தசரதன் குறையும் கைகேயி நிறையும், அழகு, சேரர் தாய முறை, சேரர் பேரூர், தமிழும் தமிழரும், திருவள்ளுவர், தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை ஆகியவை நாவலர் சோமசுந்தர பாரதியார் எழுதிய நூல்களில் மிக முக்கிய மானவையாகும்.

27.07.1959 அன்று பாரதியாரின் 80ஆவது அகவை நிறைவு விழா மதுரையில் தமிழ்ச்செம்மல் கி. பழனியப்பனார் (பழ. நெடுமாறன் அவர்கள் தந்தையார்) முயற்சியில் வெகு சிறப்பாக நடத்தப்பட்ட நிகழ்வே அவரின் நாவலர் பாரதியாரின் நிகழ் வாகும் 14.12.1959இல் அவர் தமது தமிழ் மூச்சை நிறுத்திக் கொண்டார்.

அவர் காட்டிய வழியில் ஆரியத்தை வீழ்த்திட, திராவிடத்தைப் புறந்தள்ளிட, தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்திட உறுதி ஏற்போம்! நாவலர் பாரதியாரை மக்களிடம் கொண்டு செல்வோம்.

நூல் உதவி

1) தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள் - குன்றக்குடி பெருமாள்

2) நெஞ்சில் நிலைத்தவர்கள் - கரிகாலன்

3) ‘செந்தமிழ்ச் செல்வி’ திங்கள் வெளியீடு (1937 - 1938)

4) தமிழன் தொடுத்த போர் - மா. இளஞ்செழியன்

5) மறுமலர்ச்சி - மறுமலர்ச்சி நூல் நிலையம்

6) நாவலர் ச.சோமசுந்தர பாரதியாரின் நூல் தொகுதி, கட்டுரைகள் சொற்பொழிவு

7) தூய தமிழ்க் காவலர் கு.மு. அண்ணல் தங்கோ - செ. அருள் செல்வன்

தன்மானத்தலைவர் நாவலர் சோமசுந்தர பாரதியார்

கதிர்நிலவன்

http://www.akaramuthala.in/modernliterature/katturai/%E0%AE%A4%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%A9%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B2%E0%AF%88%E0%AE%B5%E0%AE%B0%E0%AF%8D-%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%B2%E0%AE%B0%E0%AF%8D-%E0%AE%9A%E0%AF%8B/



நாவலர் சோமசுந்தர பாரதியார்
1879–1959
எழுத்திலும் சொல்லிலும்
மிக்கத் தமிழ்ப் பேரறிஞர்

கதிர் நிலவன்

நாவலர் சோமசுந்தர பாரதியார் நினைவு நாள்
கார்த்திகை 29, 1990 / திசம்பர் 14, 1959

ஆரிய எதிர்ப்பும் திராவிட மறுப்பும்

1937ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போரில்தான் மொழிவழி அடிப்படையில் தமிழ்த்தேசிய இனம் தன்னைத்தானே அடையாளங் கண்டது. அப்போராட்டத்தின் மூலமாக உருவான மொழிவழி மாகாணக் கோரிக்கையும், ‘தமிழ்நாடு தமிழருக்கே’ முழக்கமும் அப் போராட்டத்தில் ஈடுபட்ட திராவிட இயக்கத் தலைவர்களால் திராவிடன், திராவிட நாடு என்று மடைமாற்றம் செய்யப்பட்டது.

முதல் இந்தி எதிர்ப்புப் போரில் உருவான தமிழின அடையாளத்தை இழக்க சோமசுந்தர பாரதியாருக்கு மனம் வரவில்லை. பெரியார் உருவாக்கிய ஆரியத்திற்கு எதிர்வகை குறியீட்டுச் சொல்லாகிய திராவிடத்தை சோமசுந்தர பாரதியார் ஒப்புக் கொள்ள மறுத்தார். ஆரியர் x தமிழர் என்பதே அவரது கொள்கை நிலைப்பாடாகும்.

1937ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போரில் "தமிழர் கழகம்" எனும் அமைப்பை நிறுவினார். தமிழ்மொழி ஆக்கத்திற்கும், இந்தி எதிர்ப்புக்கும், தமிழர் முன்னேற்றத்திற்கும் வெவ்வேறு பெயர்களில் அமைக்கப் பெற்ற இயக்கத்தினர்களெல்லாம் தமிழர் கழகக் கிளைகளை ஆங்காங்கே அமைக்க வேண்டுமென்று பாரதியார் பேரழைப்புக் கொடுத்தார். பிறகு 'தமிழர் கழகம்' எனும் இதே பெயரில் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் அமைப்பைக் கட்டிய போதும் அதன் தலைவராக பாரதியார் பொறுப்பு வகித்தார்.

1942 இல் பெரியாரின் திசை மாறிப்போன 'திராவிடநாடு திராவிடர்க்கே' முழக்கம் காதைப் பிளந்து வந்த நிலையில், சி.பா.ஆதித்தனார் 'தமிழ் இராச்சியக் கட்சி'யை உருவாக்கினார். அப்போது அதனை மனமுவந்து தொடங்கி வைத்தவரும் பாரதியார் என்பது நினைவு கூரத்தக்கது.

நீதிக்கட்சியில் பெரியார், அண்ணா இருந்த போதும், தி.மு.க.வை அண்ணா உருவாக்கிய போதும் திராவிடம் குறித்தத் தமது மறுப்புக் கருத்தை பாரதியார் வெளிப்படுத்திய தருணங்கள் பல உண்டு.

14.3.1943இல் சேலத்தில் நடந்த 'கம்பராமாயண எரிப்புப் போர்' உரையாடலின் இறுதிப் பகுதியில் பாரதியார் கூறுகிறார்: "**தமிழன் தன்னைத் தமிழெனன்று கூறிக் கொள்ள வெட்கப்பட்டுத் திராவிடன், திராவிடன் என்று தோள் குலுக்குவதா? திராவிடன் என்ற பெயர் சங்க நூலிலே ஏது? சுயமரியாதை, சுயமரியாதை என்று ஆரியமொழி பேசினார்கள். நான் சொல்லிச் சொல்லி இப்போதுதான் தன்மானம் என்று தமிழாகப் பேசுகிறார்கள்**" என்று இடித்துரைத்தார்.

1950ஆம் ஆண்டு மே மாதம் 27, 28 நாட்களில் கோவையில் தி.மு.க. சார்பில் 'முத்தமிழ் மாநாடு' நடைபெற்றது. அதில் மாநாட்டுத் திறப்பாளராக கலந்து கொண்ட பாரதியார் அவர்கள் மீண்டுமொரு முறை திராவிடத்தின் மீது குட்டு வைத்துப் பேசினார். அது வருமாறு: "**இந்நாளில் பலர் திராவிடர், திராவிடர் என்றே சொல்லி வருகிறார்கள். தமிழ், தமிழர் என்று சொல்ல வெட்கப்படுகிறவன் தமிழனாயிருக்க முடியுமா? அவன் இரத்தத்திலே எப்படி தமிழ் இரத்தம் ஓடும்? இனியாவது தமிழ் தமிழர் என்று சொல்லுங்கள். தமிழருக்குத் தமிழரே பகைவர்**" என்றார்.

பாரதியாருக்கும் ஒரு படி மேலே சென்று அம்மாநாட்டிலே தூய தமிழ்க் காவலர் கு.மு.அண்ணல் தங்கோ 'திராவிடம்' என்ற சொல்லைக் கேட்டாலே காதில் நாராசம் பாய்ச்சியது போல இருக்கிறது என்று சொன்னாரே பார்க்கலாம். அண்ணாவோ பதைபதைத்துப் போனார். முத்தமிழ் மாநாடு திராவிடத்திற்கு விளக்கம் சொல்லும் மாநாடாக மாறிப் போனது.

1953ஆம் ஆண்டு அண்ணல் தங்கோ தமிழக எல்லைத் தற்காப்பு மாநாட்டை நடத்தினார். கருணாநிதி, கி.ஆ.பெ.விசுவநாதம், பாரதிதாசன், கா.அப்பாத்துரையார், *தார்பிடோ* சனார்த்தனம், திருக்குறள் முனுசாமி ஆகியோர் பங்கு கொண்ட மாநாட்டில் அதன் தலைவராகிய பாரதியார் "**நாம் தமிழர்! நமது இனம் தமிழினம்! நமது நாடு தமிழ்நாடு! தமிழ்நாடு தான் நமது குறிக்கோள்!** மொழிவழியாகப் பிரிந்து விட்ட போது திராவிடம் என்பதில் பொருள் இல்லை, திராவிடம் என்பது தமிழ்ச் சொல்லே அன்று" என்று பேசிய போது கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. அதற்குக் காரணம் கூட்டத்திலே பங்கு பெற்றவர்கள் கி.ஆ.பெ.விசுவநாதம் தவிர, மற்ற ஏனையோர் திராவிடச் சார்பாளர்கள் என்பதே உண்மையாகும்.

திராவிட இயக்கத்தவரின் ஆரிய எதிர்ப்பில் உடன்பாடு கொண்டவராக இருந்த போதிலும், அந்த ஆரிய எதிர்ப்பையும் கூடத் தாம் தன்மதிப்பு இயக்கத்தால் கற்றுக் கொள்ள வில்லை என்பதை தெளிவுபடுத்திக் கூறவும் பாரதியார் துணிந்தார். அது வருமாறு:

"ஆரியருக்கு அடிமைப்படாத எண்ணம் எனக்கு 40 ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டது. தன்மதிப்பு இயக்கம் தோன்றுவதற்கு முன்பே இருந்தது. என்னுடைய 14 வயதில் திருமணம் நடைபெற்றது. என்னுடைய சிவநெறி வேறு. இன்று சைவப்பண்டிதர் கூறும் சைவமல்ல, ***உண்மையே எனக்குச் சிவம்.*** *எனக்குத் திருமணம் பார்ப்பனரை வைத்து செய்வதாகக் கூறினார்கள்.* ***சைவ ஆகமங்களின் படி பார்ப்பனர்கள் சண்டாளர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.*** *கோயில்களிலே அவர்கள் கொடி மரத்துக்கு அப்புறம் நுழையக் கூடாது. வந்தால் தீட்டாகி விடும் என்று ஆகமம் கூறுவதால் அப்படிப்பட்ட சண்டாளர்களைக் கொண்டு திருமணம் செய்யாமல் சைவ குருக்களை வைத்துத் திருமணம் செய்தேன். எனது சிறிய வயதிலேயே எனக்கு அந்த நோக்கம் இருந்தது. தன்மதிப்பு இயக்கத்தாலோ, அண்ணாதுரையாலோ அந்த நோக்கம் எனக்கும் வரவில்லை. அது முதற்கொண்டு இதுவரை நான் தமிழருக்கு தன்மானம் வரவேண்டுமென்று உழைத்து வந்திருக்கின்றேன்."*

பாரதியார் தமிழ் நூல்களிலே உள்ள ஆரியத்திற்கு வலுசேர்க்கும் கருத்துகளை புறந்தள்ள வேண்டுமென்று வற்புறுத்தும் அதே வேளையில் நல்ல கருத்துகள் இருக்கும்நேர்வில் போற்றிடவும் தயங்கக் கூடாது என்பார்.

அண்ணா கம்ப இராமாயணத்தை எரிக்கும் முயற்சியில் ஈடுபட்ட போது அதை வன்மையாகக் கண்டித்ததோடு ஒரு சிறந்த காவியத்தை எரிப்பது நல்லதன்று. அது தமிழ் நெறியன்று. ஆபாசக்கருத்துகளை எரிக்கச் செய்யப்படும் முயற்சிக்கு வேண்டுமானால் நான் துணை நிற்பேன். அருந்தமிழ் நூலை எரிப்பதால் ஆபாசக் கருத்தை எப்படி அழிக்க முடியும்? கம்பனைப் போல் சிறந்த கவியை கண்டதில்லை என்று கம்பனைப்

போற்றினார். பாரதியார் முன்னெடுத்த ஆரிய எதிர்ப்பும், திராவிட மறுப்பும் இன்றைக்கு வளர்ந்து வருவது கண்கூடான உண்மையாகும்.


https://www.vallamai.com/?p=91251

நற்றமிழ் நாவலர் – சோமசுந்தர பாரதியார்

மேகலா இராமமூர்த்தி

சத்தியானந்த சோமசுந்தரன் என்ற இயற்பெயர் கொண்ட சோமசுந்தர பாரதியார் 1879-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27-ஆம் நாள் எட்டப்பப்பிள்ளை – முத்தம்மாள் இணையருக்கு மகவாய் எட்டயபுரத்தில் பிறந்தார்; எட்டயபுரம் அரண்மனையில் அரசியாரின் அரவணைப்பில் வளர்ந்தார். அரண்மனையில் பணியாற்றிவந்த சின்னசாமி ஐயரின் புதல்வர் சுப்ரமணிய பாரதிக்கு நண்பர் ஆனார்.

இவர்கள் இருவரும் தமிழ் நூல்களைக் கற்பதிலும், பாடல்கள் புனைவதிலும் குழவிப் பருவத்திலேயே பெருவிருப்புக் கொண்டிருந்தனர். அச்சமயம்,



யாழ்ப்பாணத்திலிருந்து நெல்லைக்கு புலவர் ஒருவர் வருகை புரிந்திருந்தார். அரண்மனை அவையில் நடந்த புலவர் கூட்டத்தில் ஈற்றடி ஒன்றைக் கொடுத்துப் பாடல் ஒன்றை இயற்றித் தருமாறு

அவர் புலவர்களை வேண்டினார். கூட்டத்துக்குச் சென்றிருந்த சோமசுந்தரமும், சுப்பிரமணியனும் தாம் எழுதிய பாடல்களைக் கொடுத்தனர். அனைத்துப் பாடல்களிலும் இவர்கள் இருவரும் எழுதிய பாடல்களே சிறந்ததெனத் தெரிந்தெடுத்த அப்புலவர் இருவருக்கும் 'பாரதி' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தார்.

எட்டயபுரத்திலும் அதைத் தொடர்ந்து நெல்லையிலும் கல்விபயின்ற சோமசுந்தர பாரதியார், பின்பு சென்னை கிறித்தவக் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றார்; அதன்பின்னர் சென்னை சட்டக் கல்லூரியில் படித்து 1905-ஆம் ஆண்டில் இளநிலை சட்டப்படிப்பை (Bachelor of Law) முடித்தார். தூத்துக்குடியில் வழக்கறிஞராகப் பணிபுரிந்தபொழுது தாமே முயன்று பயின்று தமிழில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

1905-ஆம் ஆண்டு முதல் 1920-ஆம் ஆண்டுவரை தூத்துக்குடியில் வழக்கறிஞராகப் பணியாற்றினார் பாரதியார். விடுதலைப் போராட்டம் எங்கும் வீரியத்தோடு நிகழ்ந்துகொண்டிருந்த அக்காலகட்டத்தில் விடுதலை வேட்கையால் உந்தப்பட்ட சோமசுந்தர பாரதியும் அவற்றில் பங்கேற்கலானார். இந்திய தேசிய காங்கிரசு இயக்கம் நடத்திய பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார். இதனால் 1905-ஆம் ஆண்டு முதல் 1919-ஆம் ஆண்டு வரை அவரது பெயரை ஐயப்பாட்டுக்குரியோரின் பட்டியலில் வைத்திருந்தது ஆங்கில அரசு.

வ. உ. சிதம்பரனாரின் அழைப்பை ஏற்று "இந்தியன் நேவிகேஷன்" என்னும் சுதேசிக் கப்பல் கம்பெனியின் செயலாளராகச் சேர்ந்தார் சோமசுந்தர பாரதியார்.

1937-ஆம் ஆண்டில் இராசகோபாலாசாரியார் சென்னை மாகாண முதலமைச்சராகப் பதவியேற்றபோது, உயர்நிலைப் பள்ளிகளின் முதல் மூன்று படிவங்களுக்கு (6, 7, 8-ஆம் வகுப்புகள்) இந்தி மொழி கட்டாயப் பாடமாக்கப்பட்டது. தாய்மொழியைத் தவிர்த்து வேற்று மொழியைத் திணிக்கக் கூடாதென்ற கருத்துடைய பாரதியார், இந்தி எதிர்ப்பு இயக்கத்தை உருவாக்கினார். 1937 செப்டம்பர் 5-ஆம் நாள் சென்னையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டின் தலைவராகப் பொறுப்பேற்றார். அக்டோபர் 25-ஆம் நாள் கட்டாய இந்திக் கல்வியை கைவிடக் கோரி, முதலமைச்சர் இராசகோபாலாசாரியாருக்குத் திறந்த மடலொன்றை (An Open Letter to Honourable Minister C. Rajagopalachariar)

தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டுப் பலருக்கும் அதனை விநியோகித்தார்.

தமிழகத்தில் 'ஆரிய-திராவிட' எதிர்ப்பு அரசியல் மிகத் தீவிரமாக இருந்த காலகட்டமது. 'கம்பராமாயணத்தைக் கொளுத்த வேண்டும்' என்றும், 'கூடாது' என்றும் சொற்போர் ஒன்று 14.03.1943-இல் சேலத்தில் நடைபெற்றது. 'தீயிட்டுக் கொளுத்த வேண்டும்' என வாதிட்டவர் பேரறிஞர் அண்ணா. 'கொளுத்தக் கூடாது' என அண்ணாவின் கருத்தை மறுத்து வாதிட்டவர் நாவலர் சோமசுந்தர பாரதியார்.

அதற்கு அவர் முன்வைத்த காரணங்களாவன:

"ஒரு சிறந்த காவியத்தை எரிப்பது நல்லதன்று; அது தமிழ்நெறியன்று. ஆபாசக் கருத்துக்களை எரிக்கச் செய்யப்படும் முயற்சிக்கு வேண்டுமானால் நான் துணைநிற்பேன். அருந்தமிழ் நூலை எரிப்பதால் ஆபாசக் கருத்தை எப்படி அழிக்க முடியும்? கம்பனைப் போன்ற ஒரு சிறந்த கவியை நான் கண்டதில்லை. மக்களுக்கு அறிவூட்டுங்கள்; ஆபாசத்தை எடுத்துக் கூறுங்கள்" என்று தமது கருத்தை யார்க்கும் அஞ்சாமல் ஆணித்தரமாக வெளியிட்டார் நாவலர்.

இளமையிலேயே தமிழிலக்கியத்தின்பால் ஆர்வம் கொண்டிருந்த சோமசுந்தர பாரதியார், பின்னாளில் தமிழிலக்கிய, இலக்கண ஆராய்ச்சியிலும் படைப்பிலக்கியத்திலும் ஈடுபட்டார். ஆராய்ச்சிகளில் தாம் கண்ட முடிவைத் தம் சொற்பொழிவுகள் வாயிலாகவும் ஆய்வுநூல்கள் வாயிலாகவும் அவர் வெளியிட்டார். 1916 ஆகஸ்டு 16-ஆம் நாள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் '**தசரதன் குறையும் கைகேயி நிறையும்'** என்னும் தலைப்பில் பாரதியார் ஆற்றிய ஆராய்ச்சிச் சொற்பொழிவு பின்னாளில் அதே தலைப்பில் நூலாக வெளிவந்தது.

தசரதன் நல்லவன்; அவன் உயிருக்கே உலைவைத்த மாபாதகியான கைகேயியே தீயவள் என்று கூறப்படுவதே நம்மனோரின் பொதுவான வழக்கம். இவ்வுண்மையை ஆராய்வதற்காக உருவாக்கப்பட்டதே "தசரதன் குறையும் கைகேயி நிறையும்" எனும் ஆய்வு நூல். இதில் தசரதனின் குறைகளைப் பின்வருமாறு பட்டியலிடுகின்றார் பாரதியார்:

1. தசரதன், கைகேயியை மணமுடித்த காலத்து, அவளுக்குக் 'கன்யாசுல்கமாக' (சீதனம்) அயோத்தி நாட்டை அளித்தவன்;

அதனால் நாடு பரதனுக்கே உரியது. ஆனால், தசரதனோ, அவனை வஞ்சித்து, இராமனுக்கு முடிசூட்ட முயன்றான்.

2. சம்பராசுரப் போரின்போது, தான்கொடுத்த வாக்குறுதியைமீறிக் கைகேயியை வஞ்சிக்கத் துணிந்தான்.
3. மிதிலை மணவிழா முடிந்தபின், காரணம் காட்டாமலேயே பரதனைக் கேகயநாட்டிற்கு அனுப்பிவிட்டான்.
4. பரதன் சென்றதும், ஆட்சித் துறையில் இராமனை ஈடுபடுத்தினான்.
5. பரதன் இல்லாத சமயம் பார்த்து, இராமனுக்குப் பட்டாபிடேகம் நடத்த முடிவுசெய்தான்.
6. பட்டாபிடேக அழைப்பினை அனைவருக்கும் அனுப்பியவன், கேகயனுக்கும் அவனிடத்திருக்கும் பரதனுக்கும் அனுப்பாமல் விட்டுவிட்டான்.
7. பட்டாபிடேக ஏற்பாடுகளைக் கைகேயினிடத்து மட்டும் கூறாமல் மறைத்துவிட்டான்.
8. ஏதுமறியாப் பரதனைத் 'தன் மகன் அல்லன்' என்றான்.

இவ்வாறு தசரதன்பால் அமைந்துள்ள குற்றங்களை வரிசையாக அடுக்கிச் செ(சொ)ல்லும் நாவலர் பாரதியார், கைகேயினிடத்து அமைந்துள்ள நிறைகள் இவையிவை என்பதையும் பட்டியலிட்டுக் காட்டுகின்றார்.

1. கைகேயி, மக்கள் நால்வரிடத்தும் வேறுபாடு காணாதவள்.
2. தன் மகன் பரதனைவிட இராமனித்து அளவற்ற அன்புடையவள்.
3. கொண்டானையன்றிப் பிற தெய்வம் அறியாதவள்.
4. போர்க்களத்தும் தன் கணவனைப் பிரிய எண்ணாமல், அவன் தேர்ச்சாரதியாய் இருந்து, தன் இன்னுயிரையும் அவனுக்காகப் பலியிடத் துணிந்தவள்.
5. தசரதனிடத்து அன்பு பூண்டவள்; ஆனால் அவனுக்குப் பழிவந்திடலாகாது என்பதற்காக வரம் கேட்டவள்.
6. தன் கணவனுக்காகத் தானே பழி சுமந்தவள்.
7. 'தெய்வக் கற்பினள்' எனக் கம்பரால் பாராட்டப் பெற்றவள்.

இவ்வாறு அதுவரை யாரும் கண்ணுறாத வகையில் தசரதனையும் கைகேயியையும் ஆய்வுக் கண்கொண்டு நோக்கி அரிய உண்மைகளை அறியத் தந்தார் சோமசுந்தர பாரதியார்.

தம் கெழுதகை நண்பரான சுப்ரமணிய பாரதி, 'பாஞ்சாலி சபதம்' எழுதிப் பாஞ்சாலியின் பெருமையைப் பாருக்கு

உணர்த்தியதுபோல், சோமசுந்தர பாரதி, கைகேயியின் பெருமைகளை விளக்கவே 'தசரதன் குறையும் கைகேயி நிறையும்' கூறினார் எனில் பொருந்தும். அவ்வகையில் தமிழிலக்கிய உலகுக்கும், தமிழாய்வுத்துறைக்கும் இந்நூல் ஒரு முன்னோடி எனலாம்.

'திருவள்ளுவர்' என்னும் தலைப்பில் சோமசுந்தர பாரதியார் எழுதிய நூல், வள்ளுவர் குறித்துத் தமிழகத்தில் நிலவிவந்த பல்வேறு வெற்றுக்கதைகளுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாய் அமைந்தது. அதிலிருந்து சில முக்கியமான செய்திகள்:

திருவள்ளுவர் மயிலையில் பிறந்தவர் அல்லர். மதுரையில் அருந்தமிழ் வேளிர் குடியில் பிறந்தவர். பண்டைப் பாண்டியரிடம் உள்படு கருமத்தலைவராக இருந்தவர்.

குறளடியால் அறக்கருத்துக்களைப் பாடி உலகுக்களித்தவர்.

நீதி நூல்களின் தோற்றத்துக்கு அடிப்படை வடமொழி நூல்களே என்றும், வள்ளுவரும் **பிரமதேவர்** எழுதிய **திரிவர்க்கம்** எனும் நூலைச் சுருக்கியே முப்பாலாக மொழிந்தார் என்றும்; அதனாற்றான் அவரை நான்முகன் அவதாரம் என்றும் கூறுவதுண்டு என்று மொழிந்த தமிழறிஞர் **மு. இராகவையங்காரின்** கருத்தை மறுத்த சோமசுந்தர பாரதியார்,

"ஆரிய தரும சாத்திர மரபு வேறு; தமிழற நூன்மரபு வேறு. இரண்டையும் நன்குணர்ந்த வள்ளுவர் தமிழ் மரபு வழுவாது, பொருளின் பகுதிகளான அகப் புறத்துறை அறங்களை மக்கள் வாழ்க்கைமுறைக் கேற்றவாறு வடித்தெடுத்துத் தந்திருக்கும் அரிய தமிழ்நூல் வள்ளுவம்.

தமிழிற் பெருமையுடைய அனைத்தும், ஆரிய நூல்களினின்று திரட்டப்பட்டிருப்பதாகக் காட்டி மகிழ்வார் சிலர்க்கன்றி, நடுநிலையாளருக்கு வள்ளுவர் குறள் தமிழில் தனி முதலற நூலேயாகும் என்பது வெள்ளிடைமலையாம்" என்றார்.

Poetry

தொல்காப்பியத்தின் பொருள் இலக்கணப்பகுதியில் உள்ள அகத்திணை, புறத்திணை, மெய்ப்பாட்டியல் ஆகிய மூன்று இயல்களுக்கும் முழுமையாக உரை எழுதியிருக்கிறார் நாவலர் பாரதியார். அவ்வுரைநூல் **'தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை'** எனும் தலைப்பில் 1942-ஆம் ஆண்டில் வெளிவந்தது.

இவையன்றிச் சேரர் தாயமுறை, சேரர் பேரூர் போன்ற ஆராய்ச்சி நூல்களையும் சோமசுந்தர பாரதியார் எழுதியுள்ளார். வடமொழியில் காளிதாசன் எழுதிய '**மேக சந்தேசம்**' எனும் நூலை அடியொற்றித் தமிழில் அவர் எழுதியதே '**மாரி வாயில்**'

எனும் கவிதை நூலாகும். நாவலரின் நற்றமிழ்க் கவிப் புலமைக்குக் கட்டியங்கூறும் இந்நூலில் இடம்பெற்றுள்ள அழகிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலிது!

"தமிழினிய தெய்வதமே மொழிகள்குலத் தனிவிளக்கே
தகவெழில்மெய் சீர்த்த சொல்லின்
அமிழ்துவிழைந் தடுத்தபல புலவரெலாம் அசையலையைக்
கடைந்தபொழு தழகி னோங்கும்
துமியினிடை எழுந்தொளிரும் செல்விஅறி வெனுமலவன்
துணைவியருள் முதல்வி தூய்மை
கமழ்கவிதை உலகுபடை கவிஞருளம் களிவிக்கும்
காதல்வளர் கன்னி வாழி!"

இளமையிலேயே சமூகச் சீர்திருத்தங்களில் ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார் சோமசுந்தர பாரதியார். ஆதலால் பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கத்தோடு தம்மைப் பிணைத்துக்கொண்டார். சடங்குகள் நீக்கிய திருமணம் உள்ளிட்ட விழாக்களை முன்னின்று நடத்தினார். தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தின் மதுரை மாவட்டத் தலைவராகவும் செயற்பட்டார். அப்பணியின் உச்சமாக, 1933 மே 13-ஆம் நாள் மதுரைக்கு அருகிலுள்ள உசிலங்குளத்தில் தாழ்த்தப்பட்டோர்க்கெனத் தொடக்கப்பள்ளி ஒன்றை நிறுவினார். அதன் தொடக்க விழாவில் செக்கிழுத்த செம்மல் வ. உ. சிதம்பரனார் சிறப்புரையாற்றினார்.

வழக்கறிஞராய்ப் பல்லாண்டுகள் பணிபுரிந்த பாரதியார், 1933-ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 1938 ஏப்ரல் வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றியிருக்கின்றார். முனைவர் அ. சிதம்பரநாதச் செட்டியார், வித்வான் க. வெள்ளைவாரணனார், திறனாய்வறிஞர் அ.ச. ஞானசம்பந்தன் போன்றோர் இவரிடம் தமிழ்பயின்று பின்னர் நானிலம் போற்றும் நற்றமிழ் அறிஞர்களாய்ச் சிறந்தனர் என்பது கருதத்தக்கது.

பெரும்புலமையும் பேரறிவும் நாநலமும் வாய்க்கப்பெற்ற சோமசுந்தர பாரதியாருக்கு ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் மன்றம் 1944ஆம் ஆண்டு **நாவலர்** பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

மதுரை திருவள்ளுவர் கழகத்தார் அவருக்கு 1954-ஆம் ஆண்டில் **கணக்காயர்** பட்டம் வழங்கிக் கௌரவித்தனர். அண்ணாமலைப் பல்கலைக்கழத்தின் வெள்ளிவிழாவில் அவருக்கு **மதிப்புறு முனைவர்** (Honorary Doctor) பட்டம் அளிக்கப்பட்டது.

பேச்சாலும் எழுத்தாலும் மட்டுமன்றிச் செயலாலும் தமிழ்சிறக்கப் பாடுபட்டவர் 'இளசை கிழாரான' நாவலர் சோமசுந்தர பாரதியார். தாய்த்தமிழுக்கு ஊறு நேர்ந்தபோதெல்லாம் அதனை அஞ்சாது எதிர்த்து நின்ற தீரர் அவர். தமிழ்ப் புலவர்களைப் போற்றிக் கொண்டாடி அவர்கட்கு வேண்டுழிப் பொருளுதவி செய்தவர். ஆய்வு நெறிமுறைகள் இவை எனக் காட்டித் தம் மாணாக்கரிடையே ஆய்வு மனப்பான்மையை ஊக்குவித்துத் திறனாய்வுத்துறையை வளர்த்த சான்றோர். ஆரிய மரபு இது, தமிழ் மரபு இது என்று தெள்ளிதின் விளக்கித் தமிழ்மரபு காக்க வலியுறுத்தியவர். இந்தி ஆதிக்கத்தைத் தமிழகத்தில் முதன்முதலில் எதிர்த்த பெருமைக்குரியவர். தமிழிலக்கியத்துக்கும், தமிழாராய்ச்சிக்கும் புத்தொளி பாய்ச்சிய வித்தகர். இத்துணைப் பெருமைகட்குச் சொந்தக்காரரான நாவலர் பாரதியார், 1959-ஆம் ஆண்டு டிசம்பர் 14-ஆம் நாள் தம் எண்பதாம் அகவையில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை; தமிழ்த்தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ? 'என்று பாவலர் சுப்ரமணிய பாரதிக்குப் பாவேந்தர் சூட்டிய புகழாரம் நாவலர் சோமசுந்தர பாரதிக்கும் பொருந்துவதாகும்!

*****

<u>**கட்டுரைக்குத் துணைசெய்தவை**</u>:

1. நாவலர் பாரதியார் – நற்றமிழ் ஆய்வுகள் – 1
   தொகுப்பாசிரியர் ச. சாம்பசிவனார், ம. சா. அறிவுடைநம்பி.
2. https://ta.wikipedia.org/wiki/ சோமசுந்தர_பாரதியார்

காணொளிகள்

01] நாவலர் சோமசுந்தர பாரதியார் (1879 - 1959)

https://www.youtube.com/watch?v=JVpXiGHKeRg [13:35]

தமிழில் நாவலர் என்ற பட்டத்திற்குப் பொருத்தமானவராக அடையாளப்படுத்தப்படுபவர் சோமசுந்தர பாரதியார் ஆவார். வழக்கறிஞராகப் பணியைத் தொடங்கிப் பேராசிரியராக உயர்ந்தவர். இலக்கியக் கூட்டங்களிலும் காங்கிரசு மேடைகளிலும் காத்திரமாக உரையாடியவர். பத்து நூல்களை எழுதியிருக்கிறார். அவரது ஆய்வுச் சிந்தனைகளை இந்த நூல்களை வாசிப்பதன் வழி பெறுவோம். இவரது நூல்களை மறுவாசிப்பு செய்வோம்.

02] நாவலர் சோமசுந்தர பாரதி 💮 நூல்காஞ்சி

https://www.youtube.com/watch?v=Ut2WUIotRi8 [18:04]

(😊)(😊)(😊) @@@@@@ (😊)(😊)(😊)